# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர் 114 இதழ் 2 11-3-1988 (மார்ச்11-மார்ச்25) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


**எழுத்தாளர் பயிற்சி நெறி**

புதுடெல்லி EDITAIDS நிறுவனம் பத்திரிகை நிருபர்கள் ஆசிரியர்களுக்கான தீவிர பயிற்சி நெறியை 1988 மே 3ஆம் திகதியிலிருந்து 13ஆம் தகதிவரை பாட்னாவிலுள்ள நவஜோதி நிகேதனில் நடத்தவிருக்கிறது.

# ஈழ மண்ணில் பிறந்த துறவற சபை அறுபது ஆண்டு நிறைவு கண்டது

**தோலகட்டி செபமாலைத் தாசர் சபையானது,60 ஆண்டுகளுக்கு முன் அருள்திரு B. A. தோமஸ் அ. ம. தி. அடிகளாரால் உருவாக்கப்பட்டு, இவ்வாண்டு வைரவிழாவைக் கொண்டாடிய போது, "இச்செபமாலைத் தாசர் சபை மறைபரப்பு நாடுகளுக்கு ஒரு சிறந்த ஒளி" என யாழ். ஆயர் தமது உரையில் குறிப்பிட்டார்.**

செபமாலைத் தாசர்சபையின் அறுபதாவது ஆண்டு நிறைவுவிழா மாசி மாதம் 2ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

யாழ். அருள் ஆச்சிரமத்தில் யாழ். மறை வட்ட ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் 30குருக்கள் இணைந்து நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

ஆயர் அவர்கள் தமது மறையுரையில் "செபமாலைத் தாசர் சபையானது 1928ஆம் ஆண்டு மாசித்திங்கள் 2ஆம் தேதி அன்றைய ஆயர் மேதகு கியோமர் O. M. I. அவர்களின் வேண்டுகோளால் தவத்திரு. B. A.தோமஸ் O. M. I. அடிகளாரால் யாழ். மறை வட்டத்தில் தோலகட்டி என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு அவர் கன்னியருக்கும் ஓர் சபையை ஏற்படுத்தினர். இப்போது செபமாலைத்தாசர்சபை இலங்கையிலும், இந்தியாவிலும் பரவி பல்வேறு மறை வட்டங்களில் இறைவனுக்கும் திருச்சபைக்கும் சிறந்த பணியாற்றுகின்றது. எவ்வாறாக தோமஸ் அடிகளார் எங்களுக்கு ஒரு ஞான வெளிச்சமாக இருந்தாரோ அதே போன்று செபமாலைத்தாசர் சபையும் அனைத்து வேதபோதக நாடுகளுக்கும் சிறந்த ஒளியாக விளங்க வேண்டும். அறுபது ஆண்டுகளாக இறைவன் இச்சபைக்குக் கொடுத்த கொடைகள் எல்லாவற்றிற்கும் நன்மைகள் யாவற்றிற்கும் நாம் எல்லோரும் இறைவனுக்கு நன்றி கூறுவோம். இச்சபையை இறைவன் என்றும் ஆசீர்வதித்து அது வளர்ச்சி அடைய உதவிட நாம் மன்றாடுவோம்" என்று கூறினர்.

## ஆனையிறவில் ஆன்மீக மறுமலர்ச்சி

ஆனையிறவு உப்பளம் அருகே சின்னஞ்சிறு அன்னம்மாள் கோவிலொன்று அமைந்திருப்பதை பஸ் பயணிகள் பலரும் அவதானித்திருப்பர். இந்த ஆலயத்தைச் சேர்ந்த மக்களான உப்பள ஊழியர் குடும்பங்களுக்கென்று ஆன்மீக மறுமலர்ச்சிப் பாசறை ஒன்று பெப்ருவரி 20—26 திகதிகளில் நடைபெற்றது. மூன்று மறை ஆசிரியர்களும், அருட் செல்வன் ஜெயரஞ்சனும் பங்குத்தந்தை ச. ஜெராட் அவர்களின் வழிநடத்தலின் கீழ் இந்த செயற்திட்டத்தை முன்னடத்திச் சென்றனர்.

இரண்டு மறை ஆசிரியர்கள் ஆனையிறவு மக்களின் வீடுகளைச் சந்தித்து, அவர்களின் குடும்ப விபரங்களையும், நிறை குறைகளையும் கேட்டு அறிந்தனர். மற்ற மறை ஆசிரியர் பாடசாலைக்குச் சென்று புது நன்மை பெற வேண்டிய பிள்ளைகளுக்கு ஆயத்த வகுப்புகள் நடாத்தினர். அருட்செல்வன் மறைக்கல்வியை ஊக்குவித்தது மல்லாமல், செபமாலை, பூசைத்தியானம், மரண வீட்டில் செபித்தல் போன்ற பக்தி முயற்சிகளில் மக்களுக்குப் பயிற்சியும் அளித்தார். ஒவ்வொரு மாலையும் வழிபாட்டுக்காக மக்கள் பெருமளவில் கூடினர். ஒப்புரவாகும்படி விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று பாவசங்கீர்த்தன அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இறுதி நாள் வெள்ளி மாலை பெரியதீவு என்ற சிறு கிராமத்தில் நடைபெற்ற "திறந்த வெளிச் சிலுவைப்பாதை" மூலமாக பிறசமய மக்களும் பயன் பெற்றனர். இந்த ஞானொடுக்கம் மூலமாக இங்கு ஏற்பட்ட விழிப்புணர்ச்சி தணிந்து போகாமல், ஆன்மீக மறுமலர்ச்சியாகப் பரிணமிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

## கருக்கலைப்பைச் சம்மதித்தல் மனிதாபிமானமற்ற செயல்

"கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்வதன் மூலம் ஐரோப்பிய நாடுகள் தமது எதிர்காலத்தை அடகு வைக்கின்றனர். ஒரு ஒழுக்கக் கேடு தலை தூக்கப் பாதை சமைக்கின்றனர்." என்று திருத் தந்தை கண்டித்திருக்கிறர். ஐரோப்பிய நாடுகளில் 'வாழ்வதற்கு உரிமை' என்ற மாநாடு டிசம்பர் 18ஆம் நாள் ரோமையில் நடைபெற்றபோது அம்மாநாட்டில் திருத்தந்தை உரையாற்றினர். கருவாக உருவாகிவிட்ட மனித உயிர்முதல் எல்லா உயிர்களுக்கும் பாதுகாப்பளிப்பது அரசாங்கங்களின் கடமை என்றும், கருவிலேயே ஓர் உயிரைச்கொல்ல சம்மதிப்பதன் மூலம் ஓர் அரசு, அதன் அடிப்படைக் கடமையில் ஒன்றினை இழந்துவிடுகிறது என்றும் திருத்தந்தை கூறினர். கிறீஸ்தவ கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு ஐரோப்பிய நாடுகளைத் தாம் கட்டாயப் படுத்தவில்லை என்றும், மனிதாபிமானம் உடையவர்களாய் இயங்குமாறே தாம் வேண்டுவதாகவும் திருத்தந்தை சொன்னர்.

## திருத்தந்தையின் 7வது சுற்றுமடல்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் திருச்சபையின் தலைமைப் பொறுப்பினை ஏற்று 9½ ஆண்டு காலத்தில் இதுவரை 7 சுற்று மடல்கள் எழுதியிருக்கிறர். 7வது திருச்சுற்று மடல் மாசி 19ஆம் திகதி அன்று வத்திக்கானுல் வெளியிடப்பட்டது.

20 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் எழுதிய "மக்களின் முன்னேற்றம்" (Populorum Progressio) என்ற திருச்சுற்று மடலின் 20வது ஆண்டு நிறைவினை ஒட்டித் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் வழங்கியிருக்கும் இப்புதிய திருச்சுற்று மடலின் பெயர் "சொலிசிற்றூடோ றேயி சோசியாலிஸ்" (Sollicitudo Rei Socialis) அதாவது மக்களின் சமூகப் பிரச்சனைகளுக்கான திருச்சபையின் பதில்கள்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் சமூகப் பிரச்சனைகள் தோன்றி

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## யாழ். திருக்குடும்பக் கன்னியர் ஆங்கிலப்பாடசாலை அதிபர் ஓய்வு பெறுகிறர்

கடந்த 125 ஆண்டுகளாக வட இலங்கைத் தமிழ் மகளிரின் கல்விக்குச் சிறப்பாகச் சேவை புரிந்து வரும் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் (ஆங்கிலப் பாடசாலை) அதிபராகிய அருட் செல்வி அன்ரனி யோசவ் அவர்கள் தமது 31 வருட கல்விச் சேவையின் பின் இம் மாதம் ஓய்வு பெறுகிறர். இவர் 12 ஆண்டுகள் திருக் குடும்பக் கன்னியர் மடத்தின் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு பீலிக்ஸ் பிரகாசம்,திருமதி வினிபிரெட் பிரகாசம் தம்பதியரின் ஐந்தாவது புதல்வியாகிய இவர் ஊர்காவற்றுறை, மானிப்பாய் ஆகிய இடங்களில் ஆங்கில ஆசிரியையாகக் கடமையாற்றிய பின் இறைவன் திருவருள் அழைக்கத் திருக்குடும்பத் துறவற சபையில் சேர்ந்தார்.

1960 ஆம் ஆண்டில் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் ஆசிரிய நியமனம் பெற்று க. பொ. த. (உயர்தர) மாணவியர்க்கு சமயம், உலக வரலாறு கற்பிக்கும் ஆசிரியராகச் சிறப்பாகப் பணிபுரிந்தார்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## சீன பைபிள்

பொதுவுடமை நாடான சீனவில் வாழும் 35 இலட்சம் கத்தோலிக்க கிறீஸ்தவர்களுக்காகவும், 40 இலட்சம் புரட்டஸ்தாந்து கிறீஸ்தவர்களுக்காகவும் சீனவிலேயே இதுவரை 25 இலட்சம் வேதாகமம் அச்சிடப்பட்டிருக்கிறது. இவ்வாண்டும் மேலும் 2 இலட்சம் விவிலிய நூல் அச்சாகும்.

## தவக்காலச் செயற் திட்டம்

கிளிநொச்சி மறைவட்டாரத்தில் வாழும் கிறிஸ்தவ மக்களிடையே தவக்காலச் சிந்தனையைத் தூண்டி, ஒப்புரவுக்கு அழைப்பு விடுக்கும் செயல் திட்டம் ஒன்றினை அப்பகுதிக் குருக்கள் ஒன்றியம் மேற்கொண்டுவருகிறது.

ஒவ்வொரு பங்கிலும் மூன்று நாட்களுக்கு "இயேசு உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (அரு. 2: 5) என்ற கருத்தை மையமாகக் கொண்டு வழிபாடு,மறையுரை, கருத்தரங்கு, பாடசாலைச் சந்திப்பு, பாவசங்கீர்த்தனம் என்பன நடைபெறுகின்றன. அன்பு வாழ்வின் குறைநிறைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, ஆண்டவரின் உயிர்ப்பின் ஒளியிலே புதுவாழ்வை ஆரம்பிக்க தூண்டும் வகையில் இவை அமைந்துள்ளன.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசேவாஸ் முனிவரின் 300 ஆண்டு நிறைவில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் திருமுகம்

## தேவ திருவுளத்துக்கு எப்போதும் அமையத் தயார்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஒல்லாந்தர் காலத்திற் சரித்திர சம்பவங்களைக் கவனித்தால் இரு உண்மைகள் புலனாகின்றன. இலங்கையில் திருச்சபையை நசித்து நாசஞ்செய்ய முழுமுயற்சி நடந்தது; அப்போது வெளியுதவி பெறும் நம்பிக்கையோ எதுவுமில்லை. அவ்வேளை கடவுளின் அன்பான பராமரிக்கை அதிசயமாக அதைக் காப்பாற்றியது. இங்கு திருச்சபைக்குதவ இறைவன் தெரிந்த உபகரணம் யோசேவாஸ் முனிவர்தான். சரித்திரச் சான்றுகளிலிருந்து எவ்வாறு கடவுளின் குறுக்கீடு வாஸ்முனிவர் இலங்கைக்கு வரவும் வேலை செய்யவும் வழிவகுத்ததென்று கண்டோம். அதோடு முனிவர் தேவதிருவுளத்துக்கு எப்போதும் அமையத் தயாராயிருந்ததும் துலாம்பரம். தானாகவும் தான் தாபித்த தியான சபை மூலமும் இலங்கைக்கு அவர் ஆற்றிய உதவி இல்லையேல், இங்கு ஒல்லாந்தரின் நூற்றாண்டு ஆட்சியின்பின் கத்தோலிக்க விசுவாசம் எஞ்சியிருக்குமென்பது ஐமிச்சம். அது தப்பியிருந்தாலும் விசுவாசிகளின் தொகை இப்போதிலும் மிகக் குறைவாகவே இருக்குமென்பது நிசம்.

யோசேவாஸ் முனிவர் இலங்கைக்கு ஆற்றிய சேவை ஒப்பற்றது. அதை அப்போதைய அனைத்துலக திருச்சபையின் சரித்திர சூழலோடு ஒப்பிட்டால் அதன் தனித்துவம் தெளிவாகும். அவர் உண்டாக்கிய தியானசபை முழு ஆசியாவிலும் முதல் முயற்சி என்பதால் அது சரித்திரத்தில் விசேடமானது. வாஸ் முனிவரின் பிரயாசையாலேதான் ஆசியாவின் முதல் துறவற முயற்சி சித்தி எய்தியது. அதன் ஒன்றேகால் நூற்றாண்டு வாழ்வில் இலங்கைத் திருச்சபையின் ஆன்ம விசாரணையே அது செய்த பிரதான வேலையாகும். இதனால் ஒரு ஆசியநாடு வேறொரு ஆசியநாட்டுக்கு வேத போதகரை அனுப்பியது அக்காலத்தில் ஒப்பில்லாத செயலாகும். வேத போதக நாடுகளில் ஐரோப்பியர் மாத்திரமே பொறுப்பான பதவிக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் இலங்கையில் ஆசிய திருச்சபை ஒரு ஆசியரின் தலைமையில் ஆசியகுருக்களாலேயே பரிபாலிக்கப்பட்டது தனிச் சிறப்புவாய்ந்த நிகழ்ச்சியாகும். இவ்வாறு வாஸ் முனிவர் இலங்கையில் எய்திய சித்தி முழுத்திருச்சபையிலும் பல வகைகளில் விசேடமானதென நாம் கண்டு மகிழலாம்.

## இலங்கையிலே விசுவாசத்தைக் காப்பாற்றவே இரக்கமுடன் பராமரிக்கும் இறைவன் இரகசியமாகக் குறுக்கிட்டார்

யோசேவாஸ் முனிவர் இலங்கைக்கு வந்த மூன்றாம் நூற்றாண்டு வைபவத்தைக் கொண்டாடும் இச் சமயத்தில் நாம் முதன் முதல் கடவுள்பால் உள்ளத்தை உயர்த்தி அவர் நமக்கு வெளிப்படையாகக் காட்டிய அன்பான பாதுகாவலுக்கு நன்றி நவிலவேண்டும். அதையடுத்து வாஸ் முனிவர் நமக்குச் செய்த பேருதவிக்காக நன்றி கூற வேண்டும் நினைவு கூரும் சம்பவங்கள் நடந்ததிலிருந்து தூரமான இக்காலத்தில் முனிவர் இலங்கைத் திருச்சபைக்கு ஆற்றிய அரிய சேவையின் அளவையோ தரத்தையோ நாம் போதியளவு உணராமலிருக்கலாம். அவருடைய சீவியத்தையும் சேவையையும் காத்திரம் கரிசனையுடன் படித்து அவர் செய்த உதவியை அளவிட இந்த மூன்றாம் நூற்றாண்டு நினைவு ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். அதனால், எமது தேசத்தில் அவர் எத்தனை பாடுகள் பிரயாசைகள் பட்டுக் காப்பாற்றிய விசுவாசத்தை மதிக்கவும் முடியும்.

இலங்கையிலே விசுவாசத்தைக் காப்பாற்றவே இரக்கமுடன் பராமரிக்கும் இறைவன் இரகசியமாகக் குறுக்கிட்டார். அந்த விசுவாசத்துக்காகத்தான் யோசேவாஸ் முனிவர் இலங்கைக்கு வந்து வருந்தி வேலை செய்தார். எமது மூதாதைகள் அவருடைய போதனையைக் கேட்டு அவருடைய கைங்கரியத்தால் ஆறுதலும் பெலமும் பெற்று வேதகலாபனையை எதிர்க்கவும் விசுவாசத்தைக் காக்கவும் துணிந்தார்கள். அந்த விசுவாசந்தான் எமது பாக்கியம். எனவே மூதாதைகளிடம் நாம் பெற்ற விசுவாசத்தில் உறுதியாயிருப்போம். அந்தத் திரவியத்தை மதித்து அதற்குப் பிரமாணிக்கமாயிருக்க எந்தத் தியாகத்தைச் செய்யவும் தயாராவோம்.

## உலகாயதம், சடவாதம், யாவுக்கும் உத்தரவு, ஒழுக்க வழுக்கல், தூர்த்ததனம், எதையும் ஏற்பது, தன்னிச்சைப்படி செய்யக் கிளர்ச்சி செய்தல், வேதபோதனையில் விரும்பியதைப் பொறுக்கியெடுக்க உரிமை இவையெல்லாம் விசுவாசத்தைக் குலைக்கும் ஆபத்துகளாம்

இன்று எமக்குச் மதச் சுதந்திரமுண்டு. ஆனால் இன்றைய சமுதாயத்திலே பல வேறுபாணங்கள் எமது விசுவாசத்தைத் தாக்குகின்றன. உலகாயதம், சடவாதம், யாவுக்கும் உத்தரவு, ஒழுக்க வழுக்கல், தூர்த்ததனம், எதையும் ஏற்பது, தன்னிச்சைப்படி செய்யக் கிளர்ச்சி செய்தல், வேதபோதனையில் விரும்பியதைப் பொறுக்கியெடுக்க உரிமை, இவையெல்லாம் விசுவாசத்தைக் குலைக்கும் ஆபத்துக்களாம். யோசேவாஸ் முனிவரும் தியான சபையாரும் வழிகாட்ட நமது மூதாதையர் கடூர கலாபனைகளிடையே விசுவாசத்தில் வைராக்கியமாயிருந்தது போல, நாமும் அவர்களுடைய அடிச்சுவட்டிலே நடந்து திருச்சபையின் படிப்பினைப்படியே விசுவாசத்தில் உறுதியாயிருப்போமாக,

யோசேவாஸ் முனிவரை அறிந்த மனிதர் அவர் ஒரு சுத்தவாளன் என்றே கருதினர். அவருடைய புனிதம் பற்றி ஆயர்கள், குருக்கள், தியான சபையார், இலங்கை இல்லறத்தார் அளித்த சாட்சியங்கள் அக்கால ஏடுகளிலே காணக் கிடக்கின்றன. அவர்களுக்கு அவர் கடவுளின் ஒரு உண்மையான தொண்டர். அவருடைய ஆழமான விசுவாசம், எப்போதும் கடவுளின் விருப்பையே செய்ய ஆவல், செபத்திலே கரிசனை, மறைப்பணியில் வேகம், எளிமை, தாழ்மை, ஒறுத்தல், பிறர்மீது பரிவு, தன்னை மறந்து பிறர்க்குதவும் பண்பு, மந்தையைக் காக்க ஆபத்தை ஏற்கும் உற்சாகமும் துணிவும், யாவற்றையும் ஒழுங்குபடுத்தி அலுவலை நிர்வகிக்கும் திறமை, இவைபற்றி ஏடுகள் அறிவிக்கின்றன. அருகிருந்து அவரை அறிந்தவர்கள் அவரை ஒரு புனிதர் எனவே கணித்தனர். மக்கள் குரல் ஒருபுறமிருக்க. அவர் செய்து முடித்ததென நாம் சரித்திரவாயிலாக அறிந்தவை ஒரு வீரபண்பாளன், புனித சீவியருக்கு மாத்திரமே சாத்தியமாகுமென்பதுசகசம். வாஸ் முனிவரின் புனிதத்துவம் திருச்சபையால் உத்தியோகமுறையில் விரைவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர் பீடவணக்கத்துக்கு உயர்த்தப்படவேண்டுமென்று விரும்புகின்றோம். அதற்காக மன்றாடுகின்றோம்.

யோசேவாஸ் முனிவரின் சேவையை நன்றியுடன் கணிக்க மட்டுமல்ல, அவருடைய புனிதசுவடுகளில் நாமும் நடக்க நாம் அவருடைய வாழ்க்கையைப் படிக்கவேண்டும். எமது திருமறைப் பணியாளரான அவர் நம்மெல்லோருக்கும் நல்ல மாதிரியாயிருக்கிறார். சிறப்பாக அவர் துறவிகளுக்கும் குருக்களுக்கும் ஒப்பற்ற மாதிரியாயிருக்கிறார். நற்செய்திப் பரிந்துரைகளை அவர் உத்தம அளவிலே வாழ்ந்து காட்டினார். வறுமை, தூய்மை, அமைச்சல் என்னும் புண்ணியங்கள் அவருடைய வாழ்விலே பிரகாசித்தன. முன்மாதிரியான குரு, கரிசனையுள்ள ஆயன், ஆர்வமுள்ள போதகர், வேகரமான தூதுவன், இவர்களையே நாமவரிலே காண்கின்றோம். இலங்கையில் வாழும் குருக்கள் ஒவ்வொருவரும் அவரை மாதிரியாகக் கொள்ளலாம்.

## புண்ணிய பூமியில் கொலைகள்

யோசேவாஸ் முனிவர் நன்கறிந்த நாடு. அவர் தியாகத்துடன் பணிபுரிந்த பூமி, இந்த இலங்கை சில ஆண்டுகளாக ஆறாத் துன்பத்துள் அகப்பட்டுக் கொண்டது, இதன் சரிதையில் இவ்வாறு எப்போதாவது நடந்ததில்லை. நமது நாடு கண்டதுண்டமாகிறது. நாம் ஒருவர் மற்றவருக்கு நோவும் காயமும் சாவும் வருவிக்கின்றோம். எத்தனையோ அரிய உயிர்கள் பலியாகிவிட்டன. இனப்பிரச்சனையாலே கலகமும் பிரிவினையும் சாவும் அழிவும் உண்டாகி முன்னர் பாக்கியமாயிருந்த நாட்டிலே தேசிய நாசம் வளர்கிறது. குழப்பமும் சிக்கலும் பெருகி இறுகுவதால் ஒரு புதுமை மட்டுமே நம்மைக் காப்பாற்ற முடியும்.

மூன்றாம் நூற்றாண்டைக் கொண்டாடும் போது மட்டுமன்றி உபத்திரவத்தில் அகப்பட்டிருப்பதாலும் நாம் யோசேவாஸ் முனிவரை நினைக்க வேண்டாமா? அவர் போல எந்தப் போதகரோ ஆயரோ இலங்கைக்கு நன்மை செய்ததில்லை. இலங்கைக்கு ஊழியம் புரிவதே அவருடைய அழைத்தலாய் அமைந்தது அவர் நமது நாட்டில் அன்பு கொண்டார். கைவிடப்பட்ட மந்தையைத் தேடிவந்தார், சாகுமட்டும் இங்கே பணி செய்தார். வடக்கிலும் தெற்கிலும், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு. கண்டி, கொழும்பு, நீர்கொழும்பு முதலிய எல்லா இடங்களுக்கும் சென்று சேவை செய்தார். தமிழரிடையே உழைக்கத் தமிழ்மொழி கற்றார். சிங்களவரிடையே உழைக்கச் சிங்கள மொழி படித்தார். ஒல்லாந்தர் பூமியிலும் கண்டியரசன் இராச்சியத்திலும் உழைத்தார். அவருக்கு இலங்கை ஒரு நாடு, அதின் மக்கள் ஒரு மந்தை, சில ஆண்டுகளாக அவர் அதைத் தனியவே மேய்க்கவில்லையா? முழு இலங்கைத் திருச்சபையை அவர் ஆளவில்லையா? எமது ஆபத்துவேளையில் அவர் பாராமுகமாயிருப்பாரா?

## இருபாலாரும் இணைந்த சேவை

அவருடைய போதக முயற்சியிலே கவனிக்க வேண்டிய இன்னுமொரு விடயமுண்டு. அவர் தனியாக உழைக்கவில்லை. இல்லறத்தோர் இருபாலாரையும் அதிற் சேர்த்தார். தான் போகமுடியாத இடங்களுக்கு அவர்களை அனுப்பினார். தேசத்தின் நாலாபக்கத்திலும் கடவுளின் செய்தியைப் பரப்ப அவர்களுக்கு ஆர்வத்தை வேகரத்தை ஊட்டினார். இவர்கள்தான் இலங்கையின் முதற் பொதுநிலைப் பணியாளர். இவர்கள் மூலம் அவர் தனது வேலையைப் பெலப்படுத்தினார். எனவே, இன்று நாம் பொதுநிலையினரின் அழைத்தலையும் அவசியத்தையும் விளம்பரம் செய்யும் வேளையில் அவர் எமக்கு மாதிரியாகவும் விளக்கமாகவும் நிற்கிறார்.

ஆகவே, நாம் ஆண்டவர் பக்கம் திரும்பி எமது அன்பான மறைப்பணியாளர் யோசேவாஸ் பேராலே எமது ஆதரவற்ற நிலையில் எம்மை இரக்கத்துடன் நோக்கிக் காத்தருளும்படியும், அப்படிக் காப்பதால் தமது எளிய ஊழியனை மகிமைப்படுத்தும்படியும் உருக்கமாக மன்றாடுவோம். "ஆண்டவரே எம்மைக் காப்பாற்றும் அழிந்துபோகிறோம்." (மத். 8: 25) என்று வான் நோக்கி அலறுவோம். பயங்கரவாதங்கள் நீங்கவும் சகலரும் சேர்ந்து சினேகம், சமாதானம், சகோதரத்துவம்தேடி உழைக்கவும் வேண்டுவோமாக.

ஆயர் பிறுங் மாக்கஸ் பறுனாந்து
சிலாப ஆயர்
இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றத் தலைவர்
ஆயர் வ. தியோகுப்பிள்ளை உபதலைவர்
ஆயர் டொன் சில்வேஸ்ரர் பொதுக்காரியஸ்தர்
ஆயர் வியானி பறுனாந்து தலைவர், யோசவாஸ் குழு
பேராயர் நீக்கிலஸ் மாக்கஸ் பறுனாந்து
ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்
ஆயர் என்றி குணவர்த்தன அ. ம. தி.
ஆயர் எட்மன் பறுனாந்து அ. ம. தி.
ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
ஆயர் றேமன் பீரிஸ்
ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸ்
கொழும்பு, 13 நவம்பர் 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

# திருப்பாலத்துவ சபைத் தினத்துக்கான தேசிய இயக்குநரின் செய்தி

— அருள்திரு மல்கம் றஞ்சித் —

அன்புச் சகோதரரே,

இன்று நாம் வருடாந்த திருப்பாலத்துவ சபைத் தினத்தைக் கொண்டாடுகிறோம். நற்செய்திப் பணியில் பிள்ளைகளின முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து அனுபவிப்பது மட்டுமல்லாமல் கிறிஸ்தவராகிய நாம், எமது பிள்ளைகளையும் அவர்கள் இன்று எமது சமுதாயத்தில் வகிக்கும் பங்கையும் மதித்துஅவர்களின்அருமையை உணரவேண்டும்.

உலக சனத்தொகையில் பெரும் வீதமானோர் பிள்ளைகளே என்பது சொல்லத் தேவையில்லை. ஐரோப்பாவையோ மேறகிலுள்ள செல்வந்த நாடுகளையோ போலல்லாமல் மூன்றும் மண்டல நாடுகளிலுள்ள குழந்தைச் செல்வங்கள் அதிகமாக உண்டு.

## இன்று மூன்றும் மண்டலத்திலுள்ள சிறுவரே பெரிதும் பாதிக்கப்படுபவர்கள்

இன்று இக்குழந்தைகளில் அநேகருடைய வாழ்க்கை நிலை என்ன? அநேக சந்தர்ப்பங்களில் மூன்றும் மண்டலத்தில் ஏற்படும் அழிவுகளுக்கு பெரும்பாலும் இரையாகிறவர்கள் இவர்களே. உலக சிறுவர்களில் பெரும் பகுதியினரை உள்ளடக்கியிருக்கும் மூன்றும் மண்டலததிலுள்ள சிறுவரே பெரும்பாலும் போர், இயற்கை அழிவுகள் மனிதரால் ஏற்படும் அழிவுகள்.குழந்தைத் துஷ்பிரயோகம் போஷாக்கின்மை கல்வி, இருப்பிட வசதியின்மை ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் இவர்களே. குறிப்பாக சில உண்மைகளை எடுத்துக்காட்டுவதானல், 1984ஆம் ஆண்டிற்குரிய யூனிசெப் ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி 1983-ல் ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட சிறுவர்கள் மனிதன் ஏற்படுத்திய தவிர்க்கக்கூடிய ஏதுக்களால் மரணமடைந்துள்ளனர். மரணித்த ஒவ்வொரு பிள்ளைக்கும் மற்றுமொரு பிள்ளை குருடாகவோ, செவிடாகவோ, முடமாகவோ, குறைபாடுள்ளதாகவோ ஆக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுள் மூன்றில் இரண்டு பகுதியினருக்கு சுத்தமான நீர் கிடைப்பதில்லை. பத்து வயதுக்கும் 14 வயதுக்குமிடைப்பட்ட 7½ கோடி சிறுவர்கள் வேலையாட்களாக தொழில் செய்கின்றனர். சப்பாத்துத் துடைத்தல், பொருள்களை விற்பனை செய்தல், பாரம் சுமத்தல் போன்ற வேலைகளைச் செய்கின்றனர். வீட்டுப் பணியாட்களாகவும், மீன்பிடிப் போராகவும் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். மனிதத்தன்மைக்குக் கீழ்ப்பட்ட விதத்தில் தொழிற்சாலைகளிலும் நிலக்காச் சுரங்கங்களிலும் வேலை செய்கின்றனர். இதைவிட மோசமானது குழந்தை விபசாரம். இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையில் 8 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட 2000 சிறுவர் விபசாரத்தில் ஈடுபடுவதாக யூனிசெப் அறிக்கை கூறுகிறது.

பெருந் தொகையான சிறுவர்கள்போரினல்கொல்லப்பட்டிருக்கின்றனர். இரண்டாம் உலக யுத்தம் முடிவுற்றபின் 1949ஆம் ஆண்டிற்குப் பின்னர் 70 நாடுகளில் இடம்பெற்ற 150 ஆயுதப் போராட்டங்களில் ஏறக்குறைய இரண்டு கோடி மக்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களுள் 90 இலட்சம் பேர் சிறுவர்கள். இதைவிட மோசமானது சிறுவரைப் போரிலும் பயங்கரவாதத்திலும் பயன்படுத்துவது. சில நாடுகளில் சிறுவர் போர்க்களத்தில் முன்னணியில் விடப்பட்டு இரக்கமின்றிக் கொல்லப்பட்டுள்ளனர். சிலர் பயங்கரவாத இயக்கங்களில் போராளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## எமது தாய்நாட்டில் உள்நாட்டுப்போரால் சிறுவர்கள் பலர் தமது பெற்ரோரை இழந்து தவிக்கின்றனர்

ஆகவே நாம் இன்று எமது சிறுவர்களுள் பெரும பாலானோர் வாழ்ந்து,வளர்ந்து வரும் நிலைமைகளை அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. எமது தாய்நாட்டிற் கூட உள்நாட்டுப்போர் காரணமாக ஆயிரக் கணக்கானோர் வீடிழந்துள்ளனர். அகதிச் சிறுவாகள் தொகையும் பெரிது. அவர்களுட் பலர் தமது பெற்ரோரையும் அன்பிற்குரியோரையும் இழந்து அன்பும் பராமரிப்பும் இன்றியிருக்கின்றனர். இது கவலைக்குரியது.ஆனல் உண்மை.

இது விடயங்களை தோல்வி மனப்பான்மையுடன் நோக்குவதன்று. எமது பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு நிலைமையை நன்கு உணர்ந்து கொள்வதேயாகும். ஏனெனில் ஒரு நாட்டின் மாபெரும் செல்வம் குழந்தைகளே. நல்ல ஆரோக்கியமுள்ள, பாடசாலையில் கல்வி பயிற்றப்பட்ட எதிர் காலத்தில் தொழில் வாய்ப்புள்ள ஒரு குழந்தை மனுக்குலத்திற்கே ஒரு செல்வமாகும்.

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் யூனிசெப் ஸ்தாபனத்துக்குக் கூறியதாவது: "விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் பயனுக எமது சமுதாயம் பெரும் முன்னேற்றம் அடைந்தபோதிலும். மிகுந்த துன்பங்களை அனுபவிப்போர் மத்தியில் அநேக சிறுவர்களும் இருப்பது எமது சமுதாயத்தின் பெரும் இழிவுகளில் ஒன்றாகும். எமது சமுதாயத்தில் காணப்படும் தகாத ஏற்றத்தாழவுகள் ஒரு குறிப்பிட்ட விதத்தில் எமது பிள்ளைகளிடம் பிரதிபலிக்கின்றன. உலகின் ஒரு பகுதியில் அடிப்படை மனிதத் தேவைகளுக்கும் வழியின்றி சிறுவர் துன்பப்படும் அதேவேளைகளில் ஏனைய பகுதிகளிற் சிறுவர் தமது பாலப் பருவத்திலிருந்தே பொருளுரிமை, மிதமிஞ்சிய பாவனை, விரயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயத்தினுள் புகுத்தப் படுகின்றனர்."

(26, ஏப்ரல் 1984)

## இது தமது நேரம், பொருள், அன்பு ஆகியவற்றை அவை தேவைப்படும் சிறுவரோடு பகிர்ந்துகொள்ள விரும்பும் சிறுவர்களின் இயக்கமாகும்

திருப்பாலத்துவ சபை 1843 இல் பிரான்ஸிலுள்ள நான்ஸி என்னுமிடத்தில் ஆயர் சாள்ஸ் டி வோபின் ஜான்சன் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.இது தமதுநேரம்,பொருள் அன்பு ஆகியவற்றை அவை தேவைப்படும் சிறுவரோடு பகிர்ந்துகொள்ள விரும்பும் சிறுவர்களின் அப்போஸ்தல இயக்கமாகும். இது கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் ஓர் இயக்கமாகும். பாப்பரசரின் மறைபரப்பும் சபைகளுள் ஒன்ருக உயர்த்தப்பட்டுள்ள இச்சபையின் அங்கத்தவர்கள் உலகம் முழுவதும் பரந்துள்ளனர். இவர்கள் மறைபோதக அர்ப்பணத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் ஏனைய சிறுவரின் நல்வாழ்வுக்காகப் பணிபுரிகின்றனர்.

திருப்பாலத்துவஞாயிறன்று சிறுவர், வளர்ந்தோர் ஆகிய நாம் எல்லோரும் நாம் சந்திக்கும் ஒவ்வொரு பிள்ளையிடமும் அன்பும் கரிசனையும் காட்டும்படி ஆண்டவர் எம்மை அழைக்கின்ருர் என்பதை உணரவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் எனது பிள்ளை, எனது சகோதரன், எனது சகோதரி. அவர்களது தேவைகள் எனது தேவைகள், அவர்களது சுகதுக்கங்கள் எனது சுகதுக்கங்கள்.



வளர்ந்தோர் என்ற மட்டில் நாம் எமது சிறுவர்களை மதித்து அன்புசெய்வோமாக. இவர்களை எவ்வளவு அன்புடன் ஆண்டவர் ஆசீர்வதித்தார். (மார்க் 10:16). பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்யவோ, அவர்களுக்குத் துன்மாதிரியாக இருக்கவோ வேண்டாம் என அவர் விடுத்த எச்சரிக்கையை ஒருபோதும் மறவாதிருப்போமாக (மத் 18:6). நாம் குழந்தைகள் போல் ஆகினல் மட்டுமே இறையரசில் பிரவேசிக்க முடியும் என்பதை என்றும் நினைவிற் கொள்வோமாக.

சிறுவர் என்ற மட்டில், மனுக்குலத்தின் சுயநலப் போக்குகளால் துன்புறும் ஏனைய சிறுவரோடு எமது வாழ்வு, நேரம், அன்பு கரிசனை ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளத் தயங்காதிருப்போமாக. எமதாண்டவரைப் பின்பற்றி தியாக, சுயபரித்தியாக மனப்பான்மையின் மூலம் எம்முள் அன்பினை எழுப்பி, துணிவுடன் ஆண்டவருக்கு சான்று பகர முயல்வோமாக. மறைபரப்பும் சிறுவர்கள் பெருந்தன்மையுள்ள சிறுவர்களாவர்.

மற்றவருக்காகச் செய்யும் ஒவ்வொரு தியாகத்திலும் இறைவன் உங்கள் பலமாக இருப்பாராக.

---

## நல்லதொரு உலகை நாளை உருவாக்க இன்றைய சிறுவர்களைப் பேணிக் காருங்கள்

**ஆனல் அவர்களே மனித சுயநலத்தின் முதற்பலிகள்**

— போதைப் பொருட்கள
— பலாத்கார தொழில் முகாம்கள்
— பாலியல் பற்றி மிதமிஞ்சி விளக்கும் நிழற் படங்கள், சஞ்சிகைகள
　— சிறுவர் கடத்தல்
　— குழந்தைகள் சுவீகரிப்பு விற்பனை நிலையங்கள்
　— சிறுவர் விபச்சாரம்
— தொழில்புரியும் சிறுவர்
— அகதிச் சிறுவர்
— கைவிடப்பட்ட சிறுவர்

### யேசு எவ்வாறு சிறுவரை நடத்தினர்?

ஆண்டவர் அவர்களை ஆசீர்வதித்தார் (மாற்கு 10:16)
அவர்களைப் பாதுகாக்கும்படி பெரியோரைப் பணித்தார்
(மத். 18:6)
விண்ணரசு அவர்களைப் போன்ருேர்க்கு உரியது என அறிவித்தார். (லூக் 18:16)

அனைத்துலக சிறுவர் வேதபோதகர் சபை உங்கள் சிறுவரை உங்கள் உயிருக்கும் மேலாக அன்பு செய்யும்படி— அவர்களது உரிமைகளை அச்சமின்றிப் பாதுகாக்கும்படி உங்களை அழைக்கின்றது.

1843இல் பிரான்ஸைச் சேர்ந்த நான்ஸி என்ற இடத்தில் மேற்ருணியாராக இருந்த மொன்சிஞ்ஞோர் சாள்ஸ் டி வோர்பின் ஜோன்ஸன் என்பவரால் உருவாக்கப்பட்ட இச்சபை சிறுவரை அவர்களது இளம் வயதிலிருந்தே ஆழமான ஒரு கிறிஸ்தவ வாழ்வை நோக்கி வழிநடத்துவதற்கென தன்னை அர்ப்பணித்துள்ளது.

உங்கள் சிறுவரை உறுதியான கிறிஸ்தவ அத்திவாரத்தில் வளர்க்க அவர்களை இச்சபையில் சேர ஊக்குவியுங்கள் சபையில் அங்கத்துவம் எல்லா 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கும் உரியது.

மேலும் விபரங்கட்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்;-

சிறுவர் வேதபோதகச் சபை.
19, பல்கம் இடம்,
கொழும்பு 8.

## UNICEF இற்கு திருத்தந்தை வழங்கியது

"சிறுவரை என்னிடம் வரவிடுங்கள் ஏனெனில் விண்ணரசு அவர்களைப் போன்ருேர்க்கு உரியது." (லூக் 18 : 16)

விஞ்ஞானத்திலும் பொறியியலிலும் முன்னேறிவரும் நம் சமுதாயத்திலேதான் பெரும் தொகையான பிள்ளைகள் இன்று துன்புறுகிருர்கள்.இதைப்பார்க்கும் போது,பெரும் இடறலாகத் தோன்றுகிறது. பொருளாதாரத்திஞல் பாதிக்கப்படுகிறவர்கள் இச்சிறுவர்களே. ஏழைகளும் இச்சிறுவர்களே, சிறுவர்களே அடிக்கடி முதன் முதலாக தாக்கப்படுகிருர்கள் என்பது கவலைக்குரியதாக இருக்கின்றது. இன்று சமுதாயத்தில் இடறலுக்குரிய சமமற்ற தன்மையைக் காண்கிறோம். உலகின் ஒரு பகுதியில் இன்று மனித அடிப்படை தேவைகளின்றி பிள்ளைகள் துன்புறுவதையும், மற்றைய பகுதியில், நிறைவுடன் நுகரும் தன்மையுடனும், வீண் செலவு செய்தும் வாழ்வதைக் காண்கிறோம்.

(திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்)
26 ஏப்ரல்1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## மண்ணா? உயிரா?

எட்டாவது பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய எமது அதி உத்தம ஜனாதிபதி "இலங்கை இராணுவ வீரர்கள் தம் தாய் மண் காக்க உயிர் நீத்தனர். இந்திய இராணுவ வீரரும் தம் தாய் நாட்டுக்காக உயிர் நீத்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

தாய் மண் காக்கவே எல்லோரும் பலியாகின்றார்கள். மண் மீட்க உயிர்க்கொலைதான் இன்றைய உலகின் நியதியா?

ஒரு மண்ணின் மைந்தன், மறு மண்ணின் அந்நியன், ஒரு இனத்தின் விடுதலை வீரன், மறு இனத்தின் துரோகி, ஒரு குழுவின் இளைஞன், மறுகுழுவின் பயங்கரவாதி.

இவ்வாறு குழுவின் பெயரால், இனத்தின் பெயரால், மண்ணின் பெயரால் மனித உயிர்கள் விலை பேசப்படுகின்றன.

எமது மண்ணில் இத்தனை உயிர்களும் பறிக்கப்பட்டமைக்கு இரத்த ஆறு பெருக்கெடுத்தமைக்கு யார் காரணம்? அவ்வப்போது அரசியல் வாதிகள் தமது குறுகிய அரசியல் லாபத்தை நோக்கமாகக் கொண்டு இனத் துவேஷத்தை விதைத்தமையே காரணம் எனலாம்.

இலங்கை 'சுதந்திரம்' பெற்ற நாளிலிருந்து அரசியல் வாதிகள், மக்களை இனவெறி பிடித்தவர்களாக மாற்றிவிட்டார்கள். இன்று எமது அதி உத்தமனர் சொல்பவற்றையும் செய்ய நினைப்பவற்றையும் பத்து ஆண்டுகளுக்குமுன் நிறைவேற்றியிருந்தால் எமது மண் காக்க இத்தனை உயிர்ப்பலிகள் தேவைப்பட்டிருக்கமாட்டா!

தமிழ் மக்களின் விடுதலை உணர்வானது, தொடர்ந்து வந்த இனக்கலவரங்கள், தரப்படுத்தல்கள் என்பனவற்றால் மட்டும் எழுந்தவையல்ல. குடியேற்றத் திட்டங்கள் உட்பட, பலதிட்டமிட்ட இன அழிப்புச் செயற்பாடுகளால் தமிழ் இனம் காலப் போக்கில் அழிந்து விடுமோ என்ற அச்சத்தால் எழுந்த ஒன்றாகும். எனவே விடுதலை வேட்கை தீர வேண்டும் என்றால் மேற்குறிப்பிட்ட பயம் நீங்குவதற்கு போதிய உத்தரவாதம் அவசியமாகும்.

இலங்கை—இந்திய ஒப்பந்தம் இதற்கு ஒரு வழியேயன்றி முடிந்த முடிவல்ல. "இன்னும் பேசித் தீர்க்க வேண்டிய இரு அம்சங்கள் இருக்கின்றன" என்ற இந்தியப் பிரதமரின் நிலைப்பாடானது இலங்கை அரசு எந்த அளவுக்குத் தயக்கம் காட்டி வருகின்றது என்பதனைத் தெளிவு படுத்துகிறது

இலங்கையின் இறைமை, ஐக்கியம், ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றால் தமிழ் மக்களின் எதிர்காலம் நிச்சயமாக்கப்பட வேண்டும். இதற்கு அத்தியாவசியமான வழிமுறைகளை, இலங்கை அரசானது நன்கு உணர்ந்துள்ள போதிலும், இன்னமும் தயக்கம் காட்டிவருவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கொடுப்பதால் வடக்கு, கிழக்கில் சிங்களவர்களுக்கு எதிர்காலத்தில் இடமின்றிப் போய்விடக்கூடும் என்ற கலக்கம். எனவே, கொடுக்க வேண்டியதை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ, அவ்வளவுக்குக் குறைத்துக் கொடுத்து சமாதானத்தை நிலைநாட்ட முடிந்தால், அதற்கான வழியைத் தேடுவது. இரண்டாவது, அரசு கொடுத்தே ஆகவேண்டும் என்ற எண்ணத்துக்கு வந்த பின்னரும் அதனை மக்கள் அங்கீகரிக்காத பட்சத்தில் தமது எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிடும் என்ற அரசியல்வாதிகளின் பயம்.

இனவாதம் பேசி, அரசியல் ஆதிக்கம் பெறும் நிலைமை தான், இத்தனை சிக்கலான சூழ்நிலையை நம் மத்தியிலே தோற்றுவித்துள்ளதெனில், அதற்கான தீர்வு இனவாதம் எமது மண்ணில் இனிமேல் பலனற்றது என்ற நிலைப்பாடு உறுதியாவதிலேதான் தங்கியுள்ளது.

"மனித உயிரின் மாண்பினை மதி, அன்றேல் அழிவே எமது கதி" என்ற இவ்வாண்டுக்கான தவக்கால அறைகூவல் இன்றைய மக்களின் ஏக்கத்தின் பிரதிபலிப்பு. உயிரைப் பேணுவோம், மண் தானே பேணப்படும்.

"உலகத்தார் உண்டென்பது
இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்."

# "மீட்பரின் அன்னை"

திருத்தந்தையின் சுற்றுமடல் (7)

பின்பு, இந்த விசுவாசமுள்ள "கீழ்ப்படிவின்" பயணத்தின் மற்றொரு இடத்திலே மரியாள் வேறு வார்த்தைகளைக் கேட்கிறாள்: அதாவது, சிமியோன் எருசலேம் ஆலயத்தில் கூறிய வார்த்தைகளை. யேசு பிறந்து நாற்பது நாட்களாகி விட்டன. மோயீசனினது சட்டத்தின்படி மரியாளும் சூசையும் குழந்தையை "ஆண்டவர் திருமுன் நிறுத்த அவரை எருசலேமுக்குக் கொண்டு போயினர்" (லூக் 2 : 22). மிகவும் வறுமையான நிலையில் யேசுவின் பிறப்பு இடம் பெற்றது. குடிக்கணக்கெடுப்பை உரோம அதிகாரிகள் கட்டளையிட்டபோது, அதற்காக மரியாள் சூசையுடன் பெத்லகேமுக்குச் சென்றாள். "சத்திரத்தில் இடம் கிடைக்காததால்" அவள் ஒரு மாட்டுத் தொழுவத்தில் தனது மகனைப் பெற்றெடுத்து" முன்னிட்டியில் கிடத்தினாள்." (லூக் 2 : 7)

மரியாளின் விசுவாசப் பயணத்தின் இந்த ஆரம்பத்தில், நீதிமானும் இறை பக்தருமான சிமியோன் என்பவர் தோன்றுகிறார். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அவரது வார்த்தைகள் மீட்பர் பிறப்பு அறிவிப்பின் உண்மையை உறுதிப்படுத்துகின்றன. தேவதூதரின் கட்டளைப்படி "யேசு" எனப் பெயரிடப்பட்ட அக் குழந்தையை அவர் கரங்களிலேந்தினர் என நாம் வாசிக்கிறோம். (லூக் 2 : 28). சிமியோனின் வார்த்தைகளும் "மீட்பர்" என்ற பெயரின் பொருளையே, அதாவது, "இறைவனே மீட்பு" என்பதற்கு ஒத்திருக்கின்றன. இறைவனை நோக்கி அவர் கூறுகின்றார்: "மக்கள் அனைவரும் காண நீர் ஆயத்தம் செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இதுவே புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி. இதுவே உம் மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமை" (லூக் 2:30—32) ஆனால் அதே சமயத்தில் சிமியோன் மரியாளுக்கு பின்வரும் வார்த்தைகளைக் கூறுகிறார்.

"இதோ! இப்பாலன் இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ எழுச்சியாகவோ அமைந்துள்ளான்: எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான்! இதனால் பலருடைய உள்ளங்களினின்று எண்ணங்கள் வெளிப்படும்." பின் நேரடியாக அவளைக் குறித்து அவர் மேலும் கூறுவதாவது: "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்" (லூக் 2:34—35) மரியாள் தேவதூதரிடமிருந்து கேட்ட செய்திக்கு சிமியோனுடைய வார்த்தைகள் புதிய ஒளியைக் கொடுக்கின்றன. யேசு தான் மீட்பர் அவர் மனுக்குலத்திற்கு "இருள் அகற்றும் ஒளி." நத்தார் இரவன்று இடையர் தொழுவத்திற்கு வந்தபோது ஒரு விதத்தில் வெளிப்படுத்தப்பட்டது இதுவல்லவா? (லூக் 2 : 8 — 20). கீழ்த்திசையிலிருந்து ஞானிகள் வந்தபோது இன்னும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டதும் இது வல்லவா? (மத் 2 : 1 — 12).

## மரியாள் தேவதூதரிடமிருந்து கேட்ட செய்திக்கு சிமியோனுடைய வார்த்தைகள் புதிய ஒளியைக் கொடுக்கின்றன

ஆனால், அதே வேளையில் தனது வாழ்வின் ஆரம்பத்திலேயே, மரியாளின் மகனும், அவரோடு அவரது தாயும், சிமியோனுடைய ஏனைய வார்த்தைகளின் உண்மையை அனுபவிப்பார்கள்: "எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான் (லூக் 2: 34) சிமியோனின் வார்த்தைகள் மரியாளுக்கு மற்றொரு அறிவிப்பைப் போல் தோன்றுகின்றன. ஏனெனில், என்ன வரலாற்று நிலைமையில் திருமகன் தனது பணியை நிறைவேற்றப் போகிறார் என்பதை, அவரது பணி தப்பபிப்பிராயங்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் நிறைவேறப் போகிறது என்பதை அவ் வார்த்தைகள் அவளுக்கு அறிவிக்கின்றன. ஒரு பக்கத்தில் இச் செய்தி மீட்புப் பற்றிய இறைவனின் வாக்குறுதி நிறைவேறப்போகிறது என்பதில் அவளது விசுவாசத்தை உறுதிப்படுத்துகின்றது; மறுபுறத்தில் துன்புறும் மீட்பரின் அருகில், துன்பத்தின் மத்தியில் அவள் விசுவாசமுள்ள கீழ்ப்படிவான வாழ்வை வாழ வேண்டுமென்றும், அவளுடைய தாய்மை மறைபொருளானதும் வியாகுலம் நிறைந்ததுமாக இருக்குமென்றும அவளுக்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

ஆகவே கீழ்த்திசை ஞானிகளின் வருகையின்பின்னர் அவர்களது வணக்கத்தின் பின்னர் (அவர்கள் அவரைத் தெண்டனிட்டு வணங்கினர்), அவர்கள் காணிக்கைகளை அளித்த பின்னர், (மத் 2 : 11) மரியாள் தன் குழந்தையோடு சூசையின் பாதுகாவலில் எகிப்துக்கு ஓடிப்போக வேண்டியிருக்கிறது. ஏனெனில் "குழந்தையைத் தொலைக்க ஏரோது தேடப் போகிறான்," (மத் 2 : 13). ஏரோது இறக்கும் வரை அவர்கள் எகிப்தில் தங்க வேண்டியிருக்கிறது (மத் 2 : 15).

## துன்புறும் மீட்பரின் அருகில், துன்பத்தின் மத்தியில் விசுவாசமுள்ள கீழ்ப்படிவான வாழ்வு வாழவேண்டும்

17. ஏரோதனின் மரணத்திற்குப்பின் திருக்குடும்பம் நசரேத்துக்குத் திரும்பியதுடன் நீண்ட கால மறைந்த வாழ்க்கை தொடங்குகின்றது "ஆண்டவர் தனக்குக் கூறிய வாக்கு நிறைவேறும் என விசுவசித்த" (லூக் 1: 45) மரியாள் நாளுக்கு நாள் இவ்வார்த்தைகளின் உண்மைநிலையை வாழ்கின்றாள். "அவள் யேசு எனப் பெயரிட்ட" திருமகன் நாள்தோறும் அவள் அருகில் உள்ளார். அவரோடு உறவு கொள்ளும்போது அவள் நிச்சயமாக இப் பெயரைப் பயன்படுத்தினாள். இப் பெயர் இஸ்ராயேலில் நீண்ட நாள் பாவனையில் இருந்தமையால் அது எவருக்கும் வியப்பை உண்டாக்கியிருக்காது. ஆயினும் யேசு என்னும் பெயர் தாங்கியவர் "உன்னதரின் மகன்" (லூக் 1 : 32) எனத் தேவதூதரால் அழைக்கப்பட்டதை மரியாள் அறிவாள். மரியாள் கணவனின்றி, பரிசுத்த ஆவியின் வல்லமையால், [illegible] அவரைக் கருத்தரித்துப் பெற்றெடுத்தமையை அறிவாள். மோயீசனின் குல முதுவர்களின் காலத்தில் இறைவனின் பிரசன்னத்தை மேகம் மறைத்ததுபோல (யாத் 24:16; 40: 34 - 35; 1 அர. 8 : 10 - 12) இறைவன் அவள் மீது நிழலிட்டார் (லூக் 1 : 35). ஆகவே, கன்னியாகிய தான் தனது கன்னிமை பழுதுறாமல் பெற்றெடுத்த மகன் தேவதூதர் கூறிய "பரிசுத்தர்," இறைமகன் என்பதை மரியாள் அறிவாள்.

நசரேத்தூர் வீட்டில் யேசு மறைந்த வாழ்க்கை வாழ்ந்த போது, மரியாளின் வாழ்வும் விசுவாசத்தின் மூலம் "கிறிஸ்துவோடு இறைவனில் மறைந்திருந்தது" (கொலோ 3 : 3). ஏனெனில், விசுவாசம் என்பது இறைவனின் மறை பொருளோடு தொடர்பு கொள்வதாகும். மனுவுருவெடுத்த இறைவனின் விளக்க முடியாத மறை பொருளுடன் மரியாள் நாள் தோறும் எந்நேரமும் தொடர்பு கொண்டிருந்தாள். இந்த மறைபொருள் பழைய உடன்படிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட எவற்றையும் விட விஞ்சியதாகும் மீட்பரின் பிறப்பு அறிவிக்கப்பட்ட நேரத்திலிருந்து அக்கன்னித்தாயின் மனமானது இறைவனுடைய சுய வெளிப்பாட்டின் ஆழமான "புதுமை" பற்றி அறியத் தொடங்கி அம்மறைபொருளைப்பற்றி உணர்த்தப் பெற்றாள். யேசு ஒரு நாள் எடுத்துக் கூறவிருந்த "சிறியவர்களில்" அவள் முதலாவதாக இருக்கிறாள்: "தந்தையே, ஞானிகளுக்கும், விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துச் சிறுவருக்கு வெளிப்படுத்தினீர்" (மத் 11 : 25). ஏனெனில், "மகன் யாரென்று தந்தையன்றி வேறெவனும் அறியான்" (மத் 11 : 27) இது இவ்விதமானால் மரியாள் எங்ஙனம் மகனை அறிவாள்? நிச்சயமாக தந்தை மகனை அறிவது போல் அவள் அறிய மாட்டாள். ஆயினும், இறைவன் அவரை யார் யாருக்கு "வெளிப்படுத்த எண்ணியுள்ளாரோ" (மத் 11 : 26 - 72)

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சே உனக்குச் சில....!

1 நெஞ்சே உனக்குச் சில !...

இன்றைய இளம்சமுதாயமே, உனக்கோர் அன்பு வேண்டுகோள். உன்கடந்தகால, நிகழ்கால, எதிர்கால வாழ்க்கைப் பாதை பற்றி நீ சற்றேனும் சிந்தித்திருக்கிறாயா ? அஸ்தமனத்தை நோக்கி அடிவைக்கும் இவ்வுலகில் உன் நிலையைப்பற்றி என்றேனும் கவலைப்பட்டிருக்கிறாயா ? என் அன்பு நெஞ்சே இதுவரை இல்லையாயினும் கூடக் கலங்காதே. போனவை போகட்டும். இனியுள்ள நாட்களையாவது பத்திரப்படுத்திக் கொள். நிலையானது உடலல்ல, உள்ளிருக்கும் ஆன்மாவே என்பதை உணர்ந்திருக்கிறாயா ? உனக்கு நீயே ஆன்ம சோதனை வைத்திருக்கிறாயா ? இல்லையாயின் இப்போதாவது ஓரிரு நிமிடங்கள் செலவிட்டு உன் நினைவுகளை அசைபோட்டு ஆன்மாவை உற்று நோக்கு. இவைகளைச் சிந்தனைக்கு எடுத்துக் கொள்.

* இளம் சமுதாயமே உன் வாழ்வானது, உனக்காக உயிர்விட்ட அன்பன் யேசுவுக்கு உகந்ததாயிருக்கிறதா ?

* உனக்காகத் தன்னையே தியாகம் பண்ணியவருக்கு உன்னை அர்ப்பணம் பண்ணத் தயாராயிருக்கிறாயா ?

* உன் வரவுக்காகக் கண்ணீருடன் காத்துக்கொண்டிருக்கிற நேசருக்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய் நெஞ்சே ?

* என் இனிய நெஞ்சே நீ வாழ்ந்தால் மட்டும் போதுமா ? உன்னைப்பற்றி மட்டுமே சிந்தித்து, நான் என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே வாழ முற்படுகிறாயா ? நீ உன் அயலவரில் அன்பன் யேசுவைக் காண வேண்டாமா ?

* உனது முதல் அயலவன் நீ கருவான சக உதரத்திலேயே உருவான உன் சகோதரனல்லவா ? அவன் பொருட்டு நீ என்ன தியாகம் செய்திருக்கிறாய் ?

* நெஞ்சே பிறப்பால் தொடரும் உறவுகளோடு மாத்திரம் நின்று விடாது பிணைப்பாலும், அணைப்பாலும் தொடர்கின்ற உன்னத உறவுகளான உன் அயலவர் மட்டில் நீ எப்படி வாழ்ந்திருக்கிறாய் ? என் அன்பே சற்றே சிந்தித்துப்பார்.

* உன் கரங்கள் உன் அயலவச் சகோதரர்களின் விழிநீரைத்துடைக்க விரைகிறதா ? உன் கரங்கள் காயப்பட்ட உடலுக்கும், நொந்துபோன உள்ளத்துக்கும் கட்டுப்போட விழைகிறதா? செல்வத்தில் மட்டுமல்ல வறுமையிலும் கூட கூடவே பங்குகொள்ளும் உளம் உனக்குண்டா ? சோதனையிலும், வேதனையிலும் கூட உன் நட்பைத் தொடர்கிறாயா ?

* நெஞ்சே சற்றே சிந்தித்துப்பார் உனக்காக, உன் மீட்பிற்காக தன் இன்னுயிரையே கொடிய வாதைகளின் மத்தியில் ஈந்தவருக்கு நன்றியாக நீ ஏன் உன் அயலவனுக்கு உதவக் கூடாது?

* கஷ்டத்திலும் நேர்மையாய் இருந்து. நீ ஏமாற்றப் பட்டாலும் கூட உன் அயலவனை ஏமாற்றாதிருந்தால் உன் வாழ்வு நிறைவாழ்வாகத் திகழுமல்லவா ?

நடைமுறை வாழ்வுக்குச் சிரமமாயுள்ள இவை யாவற்றையும் நடைமுறைப் படுத்துவது எப்படியென்று வேதனைப் படுகிறாயா நெஞ்சே ? அன்பன் உன் உள்ளத்தில் வர வேண்டுமானால் நீ சிறிதாகவேனும் தியாகங்கள் புரியத்தான் வேண்டும். துருப்பிடித்த உன் இதயத்தைத் திறக்கத்தான் வேண்டும். திறந்துவிடு நெஞ்சே, துருக்கள், தூசிகள், சிலந்திவலைகள், மாய வலைகள், எல்லாம் கொட்டும்படியாக அடித்துத் திறந்துவிடு மனமே. திரும்பவும் அது வேதனை தருவதாயின் தேவனை நோக்கிக் கூவியபடியே திறந்துவிடு. அப்போது வலியின் கொடுமை மறைந்துவிடும்.

பகுதி இரண்டு தொடரும்

[illegible] இந்திரா [illegible]

---

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை;
11-03-88




அன்பு இளம் உள்ளங்களுக்கு!

உங்கள் மனம் இன்று படும் வேதனை எனக்கு நன்கு புரிகிறது. வாழப் பிறந்த நாம் எதையும் தாங்கும் இதயத்துடன் வாழ முயலத்தான் வேண்டும். இன்றைய நிலையில் எந்த வயதினரும் இளம் இதயங்களான உங்கள் சோர்வைத் தாங்கமாட்டார்கள். இன்றைய உலகம் உங்கள் கரங்களில்தான். இரவும் பகலும் அவர்கள் வாழ்க்கை உங்கள் பாதுகாப்பில்தான். அதனால்தான் சொல்கிறேன்.

நீங்கள் முக்கியமானவர்கள் உங்கள் சிந்தனை செயல்கள் நல்லவையாக அமையவேண்டும். வீண் திண்ணைப்பேச்சு பேசிக் காலத்தைக் கழிப்பவர்களுக்கும், நீங்கள்தான் முன்மாதிரியானவர்களாய் வாழ்ந்து காட்ட வேண்டும்.

இளமை என்றும் நிரந்தரம் அல்ல, அந்தப் பருவத்தை நல்ல பயன் உள்ள முறையில் வழிப்படுத்தாது பின்னர் கவலை கொண்டோர் பலர். அதில் நீங்களும் சேர்ந்து விடாதீர்கள். ஒரு மனிதன் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல; எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம்.

வந்து பிறந்து விட்டோம். வாழத் தெரியவில்லை என்று ஏங்கும் இதயங்களுக்கும் நீங்கள் வழிகாட்டியாய் வாழ, நீங்கள் வாழத்தான் வேண்டும்.

இன்றைய உலகில் பெரியவர்கள் என தம்மைத்தாமே கூறிக் கொள்பவர்களின் சட்ட திட்டங்கள் எல்லாம் வெறும் புத்தக பூச்சிகளாக பல பெட்டகங்களில் அடைக்கப்பட்டுள்ளது. நடைமுறை மாற்றங்களும், எதிர்பாராத திருப்பங்களும் துடிப்புமிகு இளைஞர்களின் செயல்களாகவே காண்கிறோம்.

அழுகுரலும், மரண ஓலங்களும், அகதி முகாம்களும் பெருகுகின்றதே தவிர சமாதானம் சமாதானம் என்பது வீண் பிதற்றல் பேச்சாய்தான் இருக்கின்றது. சமாதானத்தை சாக்கடையாக்கி இரத்த ஆற்றில் குளித்து மகிழும் அரசியல் சூதாட்ட உலகில் உங்கள் வாழ்க்கையை மனித விடுதலைக்கான மன உறுதியுடன் வாழத்தான் வேண்டும்; நீங்கள் வாழத்தான் வேண்டும்.

சோதனையிலும் சாதனை புரிந்து
வேதனையிலும் நிதனை கவன்று
நாதனை. வேண்டி நல்வினை செய்வோம்

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-13

அடைக்கலம்: நேரத்தில வேதக்காறர் நறுக்கு எண்டு சொல்லினம். உண்மையாண்ணே?

குருசுமுத்தண்ணை: ஓம் ஓம். இப்ப T. V., றேடியோ கேக்கத்தான் நேரத்தில நறுக்கு. பூசை, ஞானக் கடமைகளில் நேரம் செல்ல போறத்துக்கு வீட்டில எல்லோரும் ஒற்றுமை தான் தம்பி.

---




'என்ன
உங்கட பகுதில
எல்லாம்
மேலோட்டமாய்க் கிடக்கு' —
என்கிறீங்களா?
ஓம்......... ஓம்......... கேட்குது.
கனக்க யோசிக்க வேண்டாம்.
இந்தப் பகுதியை
பெரிதாக்கவும்
சிறப்பாக்கவும்
பாதுகாவலன் ஆசிரியர்
காரியாலயத்திற்கு
முன்னால நிற்கிறோம்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பிரச்சினைகள் :-

1. விட்டுக் கொடுக்கும் மனநிலையின்மை
2. கருத்து முரண்பாடுகள்
3. சந்தேகம் (மனச்சலனம்)
4. புரிந்து கொள்ளாத தன்மை
5. இரகசியங்கள்
6. நீண்ட காலத்திற்கு கணவன் — மனைவி பிரிந்து இருத்தல். (வெளிநாடு செல்லல்)
7. கவர்ச்சி (பால் உணர்வுகள்)
8. மாமா, மாமி, பெற்றோர் தலையிடுவது

இப் பிரச்சனைகள் மூலம் குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள், பிரிவுகள், பிளவுகள் தலைகாட்டத் தொடங்கி விடும். பிரச்சனைகள் இன்றி வாழ வேண்டும் என்றால் பரஸ்பர நல்லுறவுகள் சுமுகமாகப் பரிமாறப்படவேண்டும். நான், நீ என்ற தனித்துவம் நீங்கி நாம் என்ற சமத்துவம்நிலை கொள்ளல் அவசியம்.

"நிபந்தனைக்குட்பட்ட அன்பு அன்பன்று, அது தாய்ப் பாலுக்கு விலைபேசுவது'' என்பார்கள். இந்நிலையில் குடும்பம் வாழ, அன்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். கணவன் - மனைவி மனக்கசப்பில், சிக்கலில் இருந்து புரையோடி கிடக்கும் போலி வாழ்விலிருந்து தப்பிக்க குடும்ப வாழ்வு மணங்கமிழ் மலராக மாற வேண்டும்.இறை விசுவாசம் ஊற்றெடுக்க வேண்டும்.

வாழ்வில் வசந்தம் வர, கணவன் — மனைவியின் ஒப்பந்த ஆழமான அன்புறவு "நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும், நான் காணும் உலகங்கள் நீ காண வேண்டும்'' என்னும் அன்புப் பந்தனம் குடும்ப வாழ்வை ஒற்றுமையுடன் வாழ வழி சமைக்கும்,

யேக்கப் ஜெயந்தி
9 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு மத்தி.

"பிறந்தாலும் பொம்பிளையாப் பிறக்கக் கூடாது" என வரும் சினிமாப்பாடலை ஒத்ததாகவே இன்று எமது தாய்க் குலம் சிந்திக்கின்றது. இவற்றிற்குக் காரணம், ஆண்கள் தான். ஆண்கள் பெண்களை தமக்கு நிகரானவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள். இதன் காரணமாக குடும்ப வாழ்வில் தாயானவளின். வார்த்தைகள் புறக்கணிக்கப்படுகின்றது தகப்பனுடன் இணைந்து கொண்டு வயது வந்த ஆண்மக்களும் தாயை மட்டம் தட்டிப் பேசும் போது மன விரக்தியுற்ற தாய் தன் வாழ்வையே மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு வந்து விடுகின்றாள்.

ஆணின் எலும்பை எடுத்து இறைவன் பெண்ணை ஆணிற்கு அதி நிகரான துணைவியாக்கினார். அதை அறியாத ஆண்குலம் தான் என்ற அகங்காரம் கொண்டு நிற்கின்றதே. ''இறைவன் சேர்த்த உறவை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' என்ற இறைவனின் குரலொலி நிச்சயமாக ஆண்களின் மனதிலே எப்போதும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும் என்பது உண்மை.

எனவே பெண்கள் ஆணுக்கு சரிநிகரானவர்கள். ஆண்குலமே தாய்க்குலத்தை அவமதிக்காதே! என்று கூறும் அளவிற்கு உங்களின் வாழ்க்கைப் பாதையை அமைத்து குடும்ப வாழ்வில். தாய், தந்தை. என்று வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

''தாயிற் சிறந்த கோவிலும் இல்லை'' என்பது ஆண்குலத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும்.

ம. றேமியஸ் ஆரோபணம்
D — 8
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

ஞான இலக்கிய நூல்கள் (7)

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## இறையியற் கருத்துக்கள்

எங்கு தேடியும் இறைவனைச் சந்திக்காத யோபு "இறைவன் எனக்கென்று எதைத் தெரிந்து வைத்துள்ளாரோ அதை நிறைவுபடுத்துகிறார். அத்துடன் அவர் மனதில இன்னும் என்னென்ன சிந்தனைகள் உண்டோ எனக்குத் தெரியாது" என்று கூறி மனம் நொந்துகொள்கிறார். அதிகாரம் 32—37 வரை எலிகூ என்பவர் யோபுவுக்கு அறிவுரை கூறுகின்றார். ஆனால் யோபுவின் மனதில் எழுந்த கேள்விகளுக்கு அவை திருப்தியான விடையளிக்கவில்லை ஈற்றில் 38வது அதிகாரத்தில் இறைவன் யோபுவைச் சந்திக்கிறார்.

இறைவன் யோபுவிடம் கேட்கும் கேள்விகளுக்கு யோபு எவ்வித பதிலும் அளிக்க முடியாதவராக வாயடைத்து நிற்கிறார். இறைவன் மனிதனிடமிருந்து தாழ்மையான நம்பிக்கையையும், துன்பத்தின் மத்தியில் அவரின் பராமரிப்பின் மகத்துவத்தை உணரும் மனப்பக்குவத்தையும் எதிர்பார்க்கின்றார். ஏனெனில் இறைவனில் கொள்ளும் விசுவாசமே இறுதியில் மனிதரை மீட்க வல்லது. இவ்வுலக துன்பமானது மனிதனால் புரிந்துகொள்ள முடியாத ஒரு இரகசியம். புதய ஏற்பாட்டின் கல்வாரிப்பலியில் இந்த இரகசியமானது ஓரளவிற்கு மீட்பின் ஏணிப்படியாக உணரப்பட்டது. ஆனால் இத்துன்பங்களின் மறைபொருள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போதே முற்றாகத் தெளிவாகும்.

எம் வாழ்வில் :- துன்பவேளையில் இறைவனை இகழ்வது எம் மீட்பிற்குப் பயன்படாது. மாறாக துன்ப வேளையில் இறைவனின் அருட்கரம் எப்படி எம்மைத்தாங்கி நிற்கின்றது என்பதை அனுபவித்து அந்தத் தேவ பராமரிப்பில் மனநிறைவு கொள்வதே எம் மீட்பின் ஏணிப்படியாகும்... இவ்வுலக துன்பங்கள் மறு உலக வாழ்வில் நாம் பெறவிருக்கும் அளப்பரிய இன்பத்துக்கு எம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகின்றது என்பதற்கு யோபுவின் வாழ்வு சான்றாக அமைகின்றது. தற்போதைய கலவரங்களினால் அல்லலுறும் எங்களுக்கு யோபு ஆகமம் ஆறுதல் அளிக்கும் அருமருந்தாகத் திகழ்கின்றது. அதைப் படித்து, தியானித்து நிறைவுகொள்வோமாக.

எஸ். இயூஜின் பிரான்சிஸ்

# பைபிள் மாமா

வணக்கம் மருமக்களே!

"ஆபிராம்" என்ற பெயரை —"ஆபிரகாம்" என்று மாற்றிய பின்னால் இவருக்குப் பெரும் சோதனை!—மனைவிக்கும் கூடத்தான்.

இறைவன் வாக்களித்தது நடக்குமோ நடக்காதோ? என்று அவருக்குக் கொஞ்சம் கூட ஐயம் இல்லை "விசுவாசத்தின் தந்தை" யல்லவா? சந்தேகப்படுவாரா—என்ன?

தனது வாக்குறுதி மீறப்படாது! என்று காட்ட ஓர் ஒப்பந்தம் செய்கிறார். இறைவன்! 'உருவில்லாத' இறைவன் 'உருவமுள்ள' ஆபிரகாமுக்கு, உலகமெல்லாம் "நீ—என் பிள்ளை உன் சந்ததியும்—என் மக்கள் என்று காட்ட உன் உடலிலே ஓர் அடையாளத்தை எனக்காக நீ இடவேண்டும். உன் மக்கள்; 'தேர்ந்தெடுக்கப்பட்ட' மக்கள், நீங்கள் தான், என்று காட்ட நீயும்—உன் வம்சமும், "விருத்த சேதனம் செய்ய வேண்டும்" என்று கட்டளை போட்டார்.

மறுப்பாரா தாத்தா? உடனே தனக்கும் தன் சந்ததிக்கும் அப்படியே செய்வதாக வாக்களித்தார்.

இவருடைய விசுவாசத்தைக் கண்ட ஆண்டவன், 'உன்னுடைய விசுவாசத்தின் பொருட்டு, நான் உனக்குத்தர இருக்கின்ற. புதல்வனை ஆசீர்வதிப்போம் மக்கள் பலருக்கு முதல்வனாவான். இனத்திற்கு மட்டுமல்லன்—அரசர்களுக்கும் தந்தையாவான்' என்று சொன்னார்.

ஆபிரகாமுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது—பேசுவதற்கு வாய் எழவில்லை முகம் குப்புற விழுந்து விட்டார்.

"நூறு வயதுள்ள எனக்கு; தொண்ணூறு வயதுள்ள என் மனைவிக்குப் பிள்ளை பிறப்பது இயலுமோ? என்று முறையிடா விட்டாலும்—மனத்தில் எண்ணியவராய்—ஒருவேளை "இஸ்மாயில்" என்ற தனது மற்றப் புதல்வனைப் பற்றித்தான் ஆண்டவன் சொல்கிறாரோ? என்றெண்ணி

"இஸ்மாயில்" உமது முன்னிலையிற் பிழைக்கக்கடவான் என்றார்!

அதற்கு ஆண்டவன் என்ன சொன்னார் தெரியுமா?
அடுத்த வாரம் சொல்வேன்.

அன்புடன்
உங்கள் பைபிள் மாமா.

## கவனத்தில் கொள்ள வேண்டியவை:

பைபிளில் கடவுள் உயிருள்ள கருவிகளாக தான் தேர்ந்தெடுத்த மனிதர்களைப் பயன்படுத்தி, தான் விரும்பியதை மட்டும் எழுதச்செய்து அந்த உயிருள்ள வார்த்தைகள் மூலம் இன்றும் நம்மோடு பேசுகிறார். எனவே. பைபிள் ஒரு மீட்பின் வரலாறு, விசுவாசத்தின் இலக்கியம், இறைவெளிப்பாட்டின் பதிவேடு, இறையரசின் வரலாறு, இறைவன் மனிதனுக்கு எழுதிய காதல் கடிதம் என்று சொல்லலாம்.

1. மற்றக் கதைப் புத்தகங்களைப் படிப்பதுபோல் நாம் பைபிளைப் படுத்துக் கொண்டும். நடந்துகொண்டும் ஏனோ தானோவென்று படிப்பதில் பயனில்லை. படிப்பதற்கு முன் தயாரிப்பு இருக்கவேண்டும். மனதை ஒரு நிலைப்படுத்தி, மதிப்பு மரியாதையோடும் ஆவலோடும் இறைவனின் உள்ளத்தை அறியும் பக்குவத்திற்கு நம்மை உட்படுத்த வேண்டும்.
2. சாமுவேல் 3:9 வசனத்தில் "ஆண்டவரே பேசும், உன் அடியான் நான் கேட்கின்றேன்" என்று சொல்லுவது போல் நம்மிடம் திறந்த மனநிலை வேண்டும் இறைவனோடு உரையாடுவதற்கேற்ற மனவளம் வேண்டும். இறைவன் நமது தந்தை என்ற முறையில் உரிமையோடு வாஞ்சையோடு வாசிப்பது சிறந்தது.
3. இதைவிட நாம் படிக்கும் வார்த்தை நமக்கும், நம்மைச் சுற்றி வாழ்பவருக்கும் தேவையான நற்செய்தியைத் தரும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும்.
4. கருத்தாழமிக்க, அர்த்தமுள்ள, நமது மனதைத் தொட்ட வசனத்தை அடிக்கோடிட்டு, மரியாள் எவ்வாறு தன்னுள்ளத்தே கொண்டு தியானித்தாளோ அதேபோல நாமும் அதைத் திரும்பத் திரும்பத் தியானித்துக் கடைப்பிடிக்க முயலுதல் பயன்தரும்.
5. ஒவ்வொரு நாளும் 10 அல்லது 15 நிமிடங்கள் இறைவார்த்தையைக் கேட்பதற்காகவே (வாசிப்பதற்காகவே) ஒதுக்க வேண்டும். குடும்பத்தில் உள்ள அனைவரும் இணைந்து இறைவார்த்தையைப் படித்தால் அதைவிட சிறந்த பக்தி முயற்சி இல்லை. கர்தினல் நாசல்லி நோக்கா சொல்கிறார், "நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பாடுபட்ட சுருபத்தை வைத்து குடும்பத்தார் அனைவரும் அமர்ந்து விவிலியத்தை நாள் ஒன்றுக்கு ஒரு பக்கம் படித்தால் இந்த நாடு விரைவில் ஒரு கிறிஸ்தவ நாடாகிவிடும் என்பது எனது நம்பிக்கை" என்று.
6. அன்றாட வழிபாட்டில் வாசிக்கப்படும் வாசகங்களையே மீண்டும் படித்து அதை அந்த நாள் முழுவதும் தியானிப்பது சாலச் சிறந்தது.
7. படித்து முடித்தவுடன் வார்த்தை மூலம் இறைவன் நமக்குத் தந்த மன அமைதிக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், நன்றி செலுத்த வேண்டும்: "அன்பு இயேசுவே உலகின் முடிவில்லா ஒளியே, உமது ஊழியர்கள் இறைவாக்கினர்கள், அப்போஸ்தலர்கள் பிற விவிலிய ஆசிரியர்கள் மூலம் இந்த விதிமுறைகளைத் தந்தமைக்கு நன்றி!" என்பது போன்ற செபங்களைச் சொல்லலாம்.

சகோ. ஜெனி.




மடல்: 2.

அன்புக் கண்மணிகாள்,

அன்பர் யேசுவின் ஆசிகள் என்றும் உரித்தாகுக.
நாம் வாழும் பூமி நம்மை வாட்டுகிறது.
நாம் வாழும் சூழல் நம்மை வதைக்கிறது.
நாம் கற்கும் நேரம் கலங்கித் துடிக்கிறோம்.
நாம் வணங்கும் போது வாடி நிற்கிறோம்.
ஏன் இந்தச் சோதனைகள்? வேதனைகள்.
இறைவன் தந்த இன்னுயிரை மதிக்காத காரணம்
இறைவன் தந்த ஆற்றல்களை அறியாத காரணம்.
இறையுணர்வு நம்மில் வற்றிப்போன காரணம்.
அன்னையும் பிதாவும் கைவிலங்கென
நினைத்து உடைத்தெறிந்த காரணம்.
மூத்தோர் வார்த்தையை பழசென்று
பந்தாடிய காரணம் ஆயிரம்
காரணங்களை அடுக்கிச் சொன்னாலும் எம்
அகக்கண்கள் திறந்தால் மட்டும்
எம்மால் திறந்த மனதுடன் திருந்தமுடியும்.
இத்தபக்காலத்தில் மனமாற்றம் பெற
தியாகச்சுடர் நம் தலைவன் பேசுவிடம்
வேண்டுவோமாக.

அன்பின்
அன்புவிழி.

## திருத்தந்தையின் திருவார்த்தைகள்:

எண்ணிப் பார்க்கிறேன் 'இயேசு' என்ற அந்த எரிமலை.
இந்தப் பூமியில் உலவிய நாட்களை
ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்ச்சிகள்
இன்னமும் நெஞ்சில் நடமாடுகிறது. நினைவில் நிழலாடுகிறது.
அதை உன்னும் பொழுதெல்லாம்
உள்ளத்திற்குள் புது இரத்தம் பொங்குவதாய் உணர்கிறேன்.
அவ்வாறு நான் உணர்ந்ததைத்தான் இப்போது
உங்களுக்கு உரக்கக் கூறுகிறேன்'
இயேசு என்னும் கருணைச் சுனைவிரித்த
சுகராகம் அவர்கள் இதயத்தை இதமாய் வருடியது.
விழிகளில் விழுந்து கிடந்த ஏக்கத்தையும்
துரத்தியனுப்பியது
அவரது வித்தியாசமான விரல்கள்
மக்களின் பசியைப் போக்க அப்பங்களைப் பலுகச் செய்கின்றன.
இருப்பதைப் பகிரச்செய்கின்றன.
"இருப்பதை அனைவரும் பகிர்ந்துஉண்ணவேண்டும்" என்ற
பரந்த நோக்குடன்தான் இந்த அதிசயத்தை
நடத்திக் காட்டுகிறார் யேசு.
இதன் மூலம் உலக மக்களுக்கு மகத்தானதொரு
வாழ்க்கை முறையை வகுத்தும் கொடுத்தார்.
இந்தப் 'பகிர்தலை' தொடர்ந்து செய்ய வேண்டும் என்று
அப்போஸ்தலர்களையும் கேட்டுக் கொண்டார்.
"பகிர்தல்" என்பது.
உள்ளதைப் பகிர்வது மட்டுமல்ல
மாறாக உள்ளத்தைப் பகிர்ந்து கொள்வதே
"பகிர்தல்" ஆகும்
இன்பத்தையும் துன்பத்தையும் நாம் நமக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டும்,

நன்றி: அதோ தெரிகிறது அதிகாலை.
தொகுத்தவர் சசி

## பழக்கம்

பல நாட்டுப் பழமொழிகள்.

1. பழக்கங்கள் முதலில் சிலந்தி வலை போல் மென்மையாக இருக்கின்றன. பிறகு இரும்புக் கம்பிகளாகி விடுகின்றன.
...இங்கிலாந்து......
2. பழக்கமே பின்னால் குணமாக அமையும்.
...லத்தீன்......
3. பழக்கம் என்ற அங்கியை நாம் சாகும் வரை அணிகிறோம்.
...ரஷ்யா......
4. கெட்ட பழக்கம் முதலில் யாத்திரிகனைப்போல் வரும், பிறகு விருந்தாளியாகி முடிவில் அதுவே யமனாகிவிடும்.
...அமெரிக்கா......

தொகுப்பு: சின்னப்பர்.

★ ★ ★

அங்கத்துவ விண்ணப்பங்களை
அனுப்ப மறவாதீர்
காவலன் கண்மணியைப்
படிக்கத் தவறாதீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி, சமாதானம், மனித முன்னேற்றம்
ஆகியவற்றுக்கான
தேசிய கத்தோலிக்க ஆணைக்குழு
1988 தவக்கால கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக
நடைபெறும்

## கட்டுரைப் போட்டி,
## சுவரொட்டிப் போட்டி.

இப்போட்டி பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்களுக்கு ஒரு பிரிவாகவும், 12 வயது முதல் 20 வயது வரையுள்ளவர்களுக்கு மற்றொரு பிரிவாகவும் நடைபெறவுள்ளது.

**போட்டிக்கான மையப் பொருள் :**

''மானிட உயிரின் மாண்பினை மதி
அன்றேல் அழிவே எமது கதி''

12 வயதுக்குட்பட்டவர்கள் 1976 சித்திரை 1ஆம் திகதிக்குப் பின் பிறந்தவர்களாகவும் 20 வயதுக்குட்பட்டவர்கள் 1968, சித்திரை 1ஆம் திகதிக்குப் பின்பு பிறந்தவர்களாக வயதெல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**போட்டிக்கான விதிமுறைகள்:**

1. சகல கட்டுரைகளும், சுவரொட்டிகளும் மேலே தரப்பட்ட மையப் பொருளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.
2. ஒரு போட்டியாளர் ஒரு கட்டுரையும் ஒரு சுவரொட்டியும் அல்லது ஒரு கட்டுரை அல்லது ஒரு சுவரொட்டி மட்டுமே சமர்ப்பிக்கலாம்.
3. போட்டியாளர் கல்வி பயிலும் பாடசாலை அதிபர் அல்லது அவரின் பகுதி பங்குத் தந்தை, சமர்ப்பிக்கப்படும் கட்டுரையோ, சுவரொட்டியோ அப்போட்டியாளரின் சொந்த ஆக்கமெனவும் வேறு எவருடையதுமல்ல எனவும் உறுதிப் படுத்தவேண்டும்.
4. அனைத்து கட்டுரைகளும் சுவரொட்டிகளும் 1988ஆம் ஆண்டு பங்குனி மாதம் 15ஆம் திகதிக்கு முன்பு ''தவக் காலக் கல்வித் திட்டம்'' 133, கின்சி வீதி, கொழும்பு 8 என்ற முகவரிக்கு, அனுப்பப்பட வேண்டும்.
(Lenten Education Programme,
133, Kynsey Road, Colombo-8)
5. சகல சுவரொட்டிகளும் 20" X 24" அளவுள்ள பிறிஸ்ட்டல் மட்டைகளில் தயாரிக்கப்பட வேண்டும்.
12 வயதுக்குக் கீழ்ப்பட்ட போட்டியாளரினால் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் 500—700 சொற்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
அதேவேளை 12—20 வயதுப் போட்டியாளரினால் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் 700—1200 சொற்களைக் கொண்டதாக இருக்கவேண்டும்.
6. அனைத்துக் கட்டுரைகளும் சுவரொட்டிகளும் போட்டியாளரின் பெயர், முகவரி, பிறந்த தேதி என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.
தகுதிவாய்ந்த மத்தியஸ்தர் குழுவினால் தெரிவு செய்யப்படும் கட்டுரைகளுக்கும். சுவரொட்டிகளுக்கும் சன்மானம் வழங்கப்படும்.

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி—13

வினாவுக்குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து வினா இலக்கத்தையும் சரியான விடையையும் தபால் அட்டையில் தெளிவாக எழுதி 1-4-88க்கு முன், பாதுகாவவன் அ. பெ. இல. 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். விடையும், பரிசுபெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 15-4-83-ல் வெளிவரும் பரிசு ரூபா 15/=

### வினாக்கள்

1. பண்டத்தரிப்பு பத்திமாபதியை ஆரம்பித்தவர் யார்?
2. யாழ். மறைக்கல்வி நிலையம் யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
3. திருமலையில் 1827ஆம் ஆண்டுக்கு முன் இருந்த சிங்களவர்கள் எத்தனை வீதம்?
4. மன்னார் மாவட்டக் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர் யார்?
5. திருத்தந்தை ஆண்டுதோறும் யாரைச் சந்தித்து உலகநிலை பற்றி உரையாற்றுவார்?
6. எந்தத் தீமை இலங்கைக்கு மீட்பைக் கொண்டு வந்தது

### உங்களுக்குத் தெரியுமா? போட்டி—12

சரியான விடைகள்

1. 77 நாடுகள்
2. யூகோஸ்லாவியா,
3. திரு. சாள்ஸ் அபயசேகர
4. மேதகு மரியானேஸ் ஆரோக்கியசாமி
5. இந்தியாவில், ஆகஸ்ற் 16ஆம் திகதி.
6. செப்டெம்பர் 6ஆம் நாள்.

பரிசுபெறும் நற்பேருளர்:
சியாமா அகஸ்ரின்,
யாழ்ப்பாணம்.

சரியான விடைகளை எழுதியவர்கள்

1. L. R. கொன்ஸ்ரன்ரைன்,
873, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. சியாமா அகஸ்ரின்,7, 4ஆம்குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம்.
3. இ. அன்ரனி ஜெரோம், ஊறணி, காங்கேசன்துறை.
4. இ. யோசேப் மக்சிமஸ், ஊறணி, காங்கேசன்துறை.

## மீட்பரின்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுள் அவள் முதன்மை பெற்றவள் நித்திய ''நிகழ் காலத்தில்'' பிதாவினால் பெற்றெடுக்கப்படுவதால் அவரால் மட்டுமே பூரணமாக அறியப்படும் திருமகள், அவரது மனுவுருவெடுத்தல் அறிவிக்கப்பட்ட கணம் தொட்டு மரியாளுக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், அவரது தாயாகிய அவள் விசுவாசத்திலும் விசுவாசத்தின் மூலமுமாகவே தனது மகனைப் பற்றிய உண்மையோடு தொடர்பு கொள்கிறாள். எனவே, அவள் பேறு பெற்றவள் ஏனெனில் விசுவசித்தாள், யேசுவின் குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட சோதனைகள், துன்பங்கள் மத்தியிலும், ''அவர் அவர்களுக்குப் பணிந்து'' (லூக் 2 : 51) நசரேத்தில் மறைந்த வாழ்வு வாழ்ந்த காலத்திலும், அவள் தொடர்ந்து விசுவசித்துக் கொண்டே வந்தாள். அவர் மரியாளுக்குப் பணிந்து நடந்தார். சூசைக்கும் பணிந்து நடந்தார். ஏனெனில் மக்களின் கண்கள் முன் சூசை அவரது தந்தையின் இடத்திலிருந்தார். இக் காரணத்தினால் மரியாளின் மைந்தன் ''தச்சனின் மகன்'' (மத் 13 : 55) என மக்களால் கருதப்பட்டார்.

### 1ஆம் வருட
### நினைவஞ்சலி



B. J. மரியாம்பிள்ளை
தோற்றம்: 02-07-1895
மறைவு: 10-01-1987

அன்பின் இறைவா! நீர் உம்மிடம் அழைக்கத் திருவுளமான மரியாம்பிள்ளை என்னும் உமது அடியானைக் கிருபையுடன் நோக்கி, உமது சுதனும் எம் இரட்சகருமான இயேசுவின் திருப்பாடுகளையும், மரணத்தையும், உயிர்ப்பையும் பார்த்து அவரை நித்தியவீட்டின் பங்காளியாக்கியருள உம்மை மன்றாடுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி

சுருவில்வீதி,
கரம்பொன் A/4.

### 5ஆம் ஆண்டு
### நினைவாஞ்சலி

E. பாக்கியநாதர்
மலர்வு: 4-6-1917
உதிர்வு: 18-3-1983

''உயிர்ப்பும் உயிரும் நானே.
என்னில் விசுவாசங் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்''
ஆண்டைந்து மறைந்தாலும்
அன்போடு நின் இனிய
நினைவுகளை
இதயத்தே நிறுத்தி இறைவனை
வேண்டுகின்றோம்.

திருமதி. பாக்கியநாதர்
சென். யேம்ஸ் லேன்,
A/6. இளவாலை.

வாழ்வுதரும் இறைவாக்கு

*நாமே, உங்களைத்*
*தேற்றுவோம்.*
*சாகக் கூடிய மனிதனுக்கு*
*நீ அஞ்சுவானேன்.*
*புல்லைப்போல உலர்ந்து*
*போகும்*
*மனிதனுக்குப்*
*பயப்படுவானேன்.* இசை 51: 12

இறைவாக்கு வாழ்வுதரும்

## ''எம் கருத்து'' குறள் தெளிவுரை

உலகத்தார் உண்டு என்று சொல்வதை இல்லை என்று கூறுகின்ற ஒருவன், உலகத்தில் காணப்படும் ஒரு பேயாகக் கருதி விலக்கப்படுவான்.

### 10ஆம் வருட நிறைவு



T. A. F. இராசையா
(ஆசிரியர்)
மண்ணில்மலர்வு: 26-01-1902
விண்ணில்நுழைவு: 3-3-1978

இரக்கத்தின் இறைவா இவ்வுலக பயணத்தை முடித்துக்கொண்ட எம் அன்புத் தந்தையை உமது பேரின்ப வீட்டின் பங்காளியாக்கியருளும்,
ஆமென்.

இறைவன் செய்த மாபெரும் செயல்களுக்காக அவரைப் போற்றிப் புகழ்கிறோம்.
நன்றி.

இராசையா குடும்பத்தினர்
A/1 ஏழாலை.

திருமதி ஆரோக்கியம்
யோண்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியை)

### இறைபதம் அடைந்தார்

திருமதி ஆரோக்கியம் யோண்பிள்ளை 27-02-88இல் காலமானார். அன்னார் திரு. யோண்பிள்ளை [முன்னாள் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திருக்குடும்ப கன்னியர் மடம், இளவாலை] அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கிறேஸ் அகஸ்ரீன் (இளைப்பாறிய அதிபர், ஏழாலை) அவர்களின் அன்புத் தாயாரும், திரு. யேசுதாசன் அகஸ்ரீன் [பதிவாளர் மேல் நீதிமன்றம் நீர்கொழும்பு], அவர்களின் அன்பு மாமியும், றெனி [கனடா], பேட்டி [Dr. மாத்தளை]. தர்ஷினி [Dr. மாறகம], சாந்தினி (பாகிஸ்தான்), கேசினி (இந்தியா), சுபாஷினி (நல்லாயன் வித்தியாலயம் கொட்டாஞ்சேனை), ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 29-2-88 திங்கட்கிழமை பி. ப. 4-00 மணிக்கு நடைபெற்றது.

தகவல்
திருமதி கிறேஸ்
அகஸ்ரீன்
சூராவத்தை. A/3.

## பேய் வழிபாடுகள் பற்றி ஆயர்கள் கவலை

மணிலாவில் பேய்வழிபாடு பற்றிய பல வதந்திகள் பரவி வருகின்றன, பொலிசார் இவை வெறும் வதந்திகள் என்று தட்டிக் கழித்துவிட்டாலும் ஆயரும் பிற திருச்சபை அங்கத்தினரும் இதில் உண்மையிருக்கலாம் எனச் சந்தேகப்படுகின்றனர்.

ஏறக்குறைய 40 பாடசாலை அதிகாரிகளும், குருக்கள், கன்னியரும் மணிலாவில் கூடி இதுபற்றி ஆராய்ந்தனர்.

சிவந்த கண்களையுடைய சில வாலிபர்கள் பாடசாலைச் சிறுவர்களைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

மாவட்டப் பொலீஸ் அதிபரோ சாதாரண குற்றவாளிகளும், போதைப்பொருள் பாவனையாளரும் மேற்கொள்ளும் செயலே எனக் கருதுகிறார்.

ஆனால் பிதா டேவிட் ''ஒன்றில் இத்தகைய வழிபாடு இருந்து போதைப்பொருள்களின் மூலம் இளைஞரை சீர்குலைக்கின்றது, அல்லது குற்றவாளிகள் கூட்டம் பேய்வழிபாட்டைஒரு போர்வையாகப் பயன்படுத்துகிறது''என அபிப்பிராயப்படுகிறார்.

### 31-ஆம் நாள்
### நினைவஞ்சலி

பேதுரு ஞானப்பிரகாசம்
பொன்னையா
(முன்னை நாள் கொழும்பு துறைமுக அதிகார சபை ஊழியர்.)

அன்னை மடியில்: 22-8-1922
இறைவனடியில்: 11-2 1988

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 1988-3-12 சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
மனைவி: ஞா. எலிசபேத்
(யோகம்மா)
சகோதரன்: பே. தோமாஸ்
உற்றார், உறவினர்.
நெடுந்தீவு—8 A/5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# இனவெறிக்குத் திருச்சபையின் பதில்

இந்தியாவில் இனவெறியும், ஜாதிப்பற்றும் தீவிரமடையும் நிலையில் திருச்சபை தாழ்ச்சி, பணிவு, தொண்டு ஆகியவற்றைக் கைக்கொண்டு உலகிற்கும் பணியாற்றுவதன் மூலம் ஒரு எடுத்துக்காட்டை மற்றவர்களுக்கு வழங்கியாக வேண்டும் என்று இந்திய இறையியல் வல்லுநர்கள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. பங்களூர் நகரில் டிசம்பர் 28-31 வரை இறையியல் வல்லுநர்கள் கூட்டம் நடைபெற்றது. "செல்வம், செல்வாக்கு இவற்றையடைய மற்ற இலக்குகள் மீது பொறாமை ஏற்படுவது ஒன்றே இனவெறிக்கும், அது தொடர்பான வன்முறைக்கும் காரணம்.'' என்று இது தொடர்பான பங்களூர் கூட்டத்தில் சமூகவியல் அறிஞர்கள் கூறினர். இந்த நிலையில் திருச்சபை ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி விபரித்த இறையியல் வல்லுநர்கள், மதம் என்றால் என்ன? தொண்டு என்றால் என்ன? சமூக சீர்திருத்தம் என்றால் என்ன? என்பது பற்றிய தமது இப்போதைய நிலையை மறு ஆய்வு செய்து, கிறீஸ்துவை மையமாகக் கொண்ட தொண்டு வாழ்வை, சீராகத் தொடங்குவதன் மூலம் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ முடியும் என்று பரிந்துரைத்திருக்கின்றனர். எப்பொழுதும் வெற்றிக்களிப்பில் ஆழ்ந்திருக்காமல் தாழ்ச்சியுடனும், பணிவுடனும் தொண்டு செய்வது போன்றே, இனவெறியும், ஜாதிப்பற்றும் தீவிரமடையும் நிலையில் அவற்றுக்குத் திருச்சபை அளிக்கும் நல்லுரைகள் இருக்க முடியும் என்று பங்களூர் மாநாட்டில் தமிழரான இறையியல் வல்லுநர் அருட்தந்தை டாக்டர் மைக்கல் அமலதாஸ் கூறினார்.

# தொழுநோயாளர் தினம்

உலகெங்கும் வாழும் கோடிக் கணக்கான தொழு நோயாளிகளை பரிவுடன் நோக்குமாறு உலக சமூகத்தை திருத்தந்தை கேட்டுக் கொண்டிருக்கிறார். தொழு நோயாளிகளுக்காக நாம் இறை வழிபாடு நடத்துவதோடு அவர்களது பிணி நீங்க தம்மால் இயன்ற உதவிகளை செய்தாக வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜனவரித் திங்கள் 31ஆம் நாள் உலக தொழு நோயாளர் தினத்தன்று திருத்தந்தை வத்திக்கானில் உரையாற்றுகையில் உலகெங்கும் ஆயிரக் கணக்கான மருத்துவர்களும், விவிலியரும் மற்றும் தன்னல மற்ற தொண்டர்களும், தொழு நோயாளர் பிணி நீங்க ஆற்றி வரும் அரிய பணிகளுக்கு நன்றி செலுத்தினார்.

## திருக்குடும்பக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

1970—1975 ஆண்டுகளில் பாடசாலையின் உப அதிபராகவும் இருந்துள்ளார்.

கல்விப் பணிபுரியும் அதே வேளையில் சமயப் பணியிலும் முக்கியமாக மறையறிவைப் பொறுத்த மட்டில் அவர் பெரும் ஈடுபாடு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அம்பிட்டியா குருமடத்திலும் பெங்களூர் திருமறை நிலயத்திலும் அவர் இதற்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். பின்பு இவர் யாழ். மறைக்கல்வி நடுநிலையத்திலும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் பகுதி நேர விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். 6 — 12ஆம் வகுப்புகளுக்கு ஆசிரிய ஆலோசகராகவும் இருந்துள்ளார். கிறிஸ்தவ தேசிய பாடநூல் ஆணைக்குழுவில் ஓர் உறுப்பினராகச் சில காலம் பணியாற்றியுள்ளார்.

கலகலப்பான சுபாவமுடைய இவர் அனைவரையும் கவரக்கூடிய சிறந்த பண்புகள் வாய்ந்தவர். மாணவராலும் ஆசிரியராலும் இலகுவாக அணுகக் கூடியவர். தவறு செய்பவரைக் கண்டிக்கும் அதேவேளையில் அவர்களுக்குத் தீங்கொன்றும் நேராமல் பாதுகாக்கும் பண்பினர். பிறர் தவறுகளை உடனடியாக மறந்து விடுபவர். நகைச்சுவை உணர்வு மிக்கவர். அதே சமயத்தில் கருமமே கண்ணாகத் தமது கடமைகளில் அணுவளவும் பிசகாதவர். அதிகாரத்தினாலன்றி அன்பினால் வழி நடத்தும் தாய்மையுள்ளம் படைத்த இக் கன்னியரின் சேவை நலம் பாராட்டும் பிரியாவிடை வைபவம் பங்குனி 8 ஆம் திகதி நடைபெற்றது.

## தியான ஒடுக்க முறை

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த யேசு சபைக் குருவாகிய பிதா போல் ராஜ் அன்றாட அனுபவங்களிலிருந்து எடுக்கப்பட்ட கதைகளைப் பயன்படுத்தி தமது தியான உரைகளை அமைக்கின்றார்.

சென்ற ஆண்டு அமெரிக்காவில் காலஞ்சென்ற இவரது ஆசிரியரான பிதா அந்தோனி டி மெல்லோவும் இவ்வாறே கதைகளைப் பயன்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"செபம் வாழ்வின் ஒரு பகுதி, அது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். கதைகளின் மூலம் மக்கள் இறைவனைத் தம் அன்றாட வாழ்வில் கண்டு கொள்ள விடுகிறேன்.'' என பிதா போல் ராஜ் கூறுகிறார்.

"கதைகள் மக்கள் தம்மை அறிந்து கொள்ளத் துணைபுரிகின்றன'' என்பது பிதா டிமெல்லோவின் கருத்து, இவர் கருத்தாழம் கொண்ட இரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

பிதா போல் ராஜ் இப்பணியில் பத்து வருட அனுபவமுடையவர். இந்தியாவில் 25 தியான ஒடுக்கங்களும் ஹொங்கொங்கில் நான்கு தியான ஒடுக்கங்களும் நடத்தியுள்ளார்.

இவரது புதிய பணிக்களம் பெங்களூர் ஆலோசனை நிலயமாகும், இங்கு இவர் வேறு குருக்களுடன் சேர்ந்து கத்தோலிக்கருக்கும் பிறமதத்தவருக்கும் பணிபுரிவார்,

## பாதுகாவலன் வளர நிதி

| | | |
|---|---|---|
| 143. | செல்வி எல்.ஆர்.சூசைப்பிள்ளை, யாழ்ப்பாணம் | 25.00 |
| 144. | T. றொபின்சன், 344/6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 5.00 |
| 145. | J. ஜெயக்குமாரன், வேலணை மேற்கு, வேலணை | 5.00 |
| 146. | திரு. செல்வநாயகம் மந்திரி, 96, சிலோ றோட், நீர்கொழும்பு | 500.00 |
| 147. | திருமதி. T டோமினிக், 213, கடற்கரை வீதி, நீர்கொழும்பு | 150.00 |
| 48. | மரியாயின் சேனை, சிலாவத்துறை | 203.00 |

இலங்கை மக்களின் ஒரே தமிழ் கத்தோலிக்க செய்திப் பத்திரிகையான பாதுகாவலன் வளரத் துணைபுரியும் உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

ஆ-ர்

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அடுத்த இதழ்

எமது அடுத்த பத்திரிகை 25-3-88 அன்று வெளிவரும் என்பதை வாசக அன்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



பொன்மலர்
யோசேப்பின் யோசேப்

| | |
|---|---|
| தோற்றம்: | மறைவு: |
| 10-11-1932 | 20-3-1987 |

அம்மா எங்கள் அன்பு தெய்வமே

இறப்பின் மூலம் தான் ஒருவருடைய பெறுமதி உணரப்படும், தாயே, உங்கள் பெறுமதியை உயிருடன் இருந்த பொழுதும் நன்றாய் உணர்ந்தவர்கள்.

இப்பொழுது நன்றாய்
உருகி விட்டோம்
கண்ணீர் கடலில்
மிதந்து விட்டோம்
பன்னிரு மாதங்களாக
நாங்கள் விட்ட கண்ணீரும்
இனி விடப்போகும்
கண்ணீரும் உங்களுக்குரிய
ஆசீர் தீர்த்தங்களாகட்டும்.
அன்னையே ! எங்களுக்காய்
வாழ்ந்தவளே ! இனி
நாங்கள் உங்களுக்காய்
அழுவது வாழ்க்கையாகிறது.
உருகும் உள்ளங்கள் என்றும்
உம் நினைவில் வாழும்.

இவவின் ஆத்ம இளைப்பாற்றிக்காக 26-03-1988 சனிக்கிழமை காலை 7மணிக்கு சூராவத்தை புனித திரேசம்மா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

கணவர்: R. E. யோசப்
மகன்: ஐறேனியஸ் (றெனி) (லண்டன்)
மகள்: யூஜினி ஜெரால்ட் (லண்டன்)
மகள்: றெஜினி (சிலோன் ஓசன் லைன்ஸ்-கொழும்பு)
மகள்: யொவானி (கலாஷேத்திரா கல்லூரி, மட்றாஸ்)
மருமகன்: ஜெரால்ட். ஜெயராஜ் (லண்டன்)

A/8

# சமயச் சுதந்திரக் கோரிக்கை

ஷெக்கொஸ்லாவாக்கியா நாட்டில் அதிக சமயச் சுதந்திரமும், அரசுக்கும் சமய நிறுவனங்களுக்குமிடையே அதிக இடைவெளியும் வேண்டி 1½ இலட்சத்திற்கு மேற்பட்டோர் கமினிஸ்ட் அரசினரிடம் கோரிக்கை ஒன்றினை அளித்திருக்கின்றனர். இத்தனை பெரிய எண்ணிக்கையில் பொதுமக்கள் கமினிஸ்ட் ஆட்சியாளரிடம் சமயச் சுதந்திரம் கோரும் மனுத் தருவது இதுவே முதன்முறை. கத்தோலிக்கர்கள் மட்டுமல்லாமல் புரட்டஸ்தாந்தரும் யூதர்களும் கூட இதில் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

# நஞ்சை முறிக்கும் மருந்து மரியாளின் ஆண்டு

இவ்வாண்டு மரியாளின் ஆண்டு. இந்த மரியாளின் ஆண்டு இந்த சமூகத்தில் புகுந்து விட்ட பல விஷத் தன்மைகளுக்கு நச்சு முறிவாக அமைந்திடட்டும் என்று கூறியிருக்கிறார் திருத்தந்தை.

மரியாளின் ஆண்டுக் கொண்டாட்டங்களுக்கான சிறப்புக் கூட்டத்தில் வத்திக்கானில் திருத்தந்தை உரையாற்றி அமைதி, சமூகநீதி, சகோதரத்துவம் ஆகிய அடிப்படையில் மரியாளின் ஆண்டு கொண்டாடப்பட வேண்டும். பல வகையிலும் இன்றைய சமூகத்தில் புகுந்து விட்ட நாகரீக பண்பாட்டு, கலாச்சார நச்சுக்களை முறிக்கும் அரும் மருந்தாக மரியாளின் ஆண்டுக் கொண்டாட்டங்கள் அமைந்திடட்டும் என்று திருத்தந்தை கூறியிருக்கிறார்.

## திருத்தந்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்த காலகட்டத்தில் திருத்தந்தை அந்தப் பிரச்சனைகளை மிகத் தெளிவாக அணுகினார். 20 ஆண்டுகளாக சமூகத்தின் பிரச்சனைகள் வேறு வடிவம் பெற்றிருக்கின்றன. புதுவடிவம் பெற்றிருக்கும் இப் பிரச்சனைகளுக்கு திருச்சபையின் பதில் என்ன என்பதைக் கூறுவதுதான் திருத்தந்தை இப்போது வெளியிட்டிருக்கும் புதிய திருமுகம்.

இந்தத் திருமுகத்தில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் உலகம் முதலாளித்துவ மேற்கத்தைய நாடுகள் என்றும், பொதுவுடமை கிழக்கத்தைய நாடுகள் என்றும் இரு கூறுகளாகப் பிரிந்து கிடப்பதை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். இப்படி உலகம் இரு கூறுகளாக பிரிந்து கிடப்பதன் விளைவாகவே பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளும், அநீதிகளும் நிகழ்கின்றன என்பதைத் திருத்தந்தை தமிகத் திறம்பட தனது புதிய திருச்சுற்று மடலில் விளக்கியிருக்கிறார்.

மேற்கென்றும், கிழக்கென்றும் உலகம் பிரிந்து கிடப்பதன் விளைவாக ஒருவர் மற்றவர் மீது அவநம்பிக்கை கொண்டிருக்கின்றார். தமது எல்லைகளைப் பாதுகாக்க வேண்டிய பெரும் கவலையில் இரு தரப்பினரும் ஆழ்ந்திருக்கின்றனர். எனவே ஆயுதங்களைச் செய்து குவிக்கின்றனர். இருக்கின்ற பொருளை எல்லாம் ஆயுதக் குவிப்பிற்கே அவர்கள் பயன்படுத்தி விட்டனர் எனின் உலகில் பொருளாதார பிரச்சனைகள் வறுமை, பசி, பட்டினி ஆகியவற்றை நீக்கிட எங்கிருந்து பொருள் இருக்கும் என்று திருத்தந்தை தனது புதிய திருமுகத்தில் கேட்டிருக்கின்றார்-

### கிறிஸ்தவ சமயம் க. பொ. த. (உ. த.)
### வினா விடைப் போட்டி

முதலாவது வினாவுக்கான பரிசு பெறும் சிறந்த விடை எமது அடுத்த இதழில் வெளிவரும். இரண்டாவது வினாவுக்குரிய விடையை உடன் அனுப்பிவையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்